
# தென்னகத் தலைவன்

ஆசிரியர்:
தினகரன்

மன்மதன் என்றால் இந்த
மாறனின் இளமை சொல்வார்
கண்படு அழகே எங்கள்
கலைஞரின் வழியே செல்வா

மல்லிகை என்றால் அழகு
மலர்களின் தலைவி என்பார்-இன்று
மாறனின் தலைவியாகி
மல்லிகா பெருமை கொண்டாய்



அண்ணனின் கொள்கைபோல ஆல்விடு விழுது
போல
தென்மொழி இசையைப்போல திருக்குறள் நீதி
போல
அள்ளியே வழங்கி வாழ்ந்த அதியமான் – பாரி
போல
மல்லிகா-மாறன் நீவிர் மங்கலவாழ்க்கை
வாழ்வீர்!

விலை 16 காசு

# மூத்த மந்திரிமார் விலகல் முச்சந்தி வரை சிரிக்குது!

# சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தார் காமராசர்!

## பண்டிதர் திணறுகிறார்! 'பாட்டீல்' குமுறுகிறார்!

காங்கிரசைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் "காமராஜ் திட்டம்" வகுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. காங்கிரஸ்காரர்களின் பழைய சேவை உணர்ச்சி போய்விடவில்லையென்றும், இன்னமும் அவர்கள் தியாகங்களுக்குத் தயாராய் இருக்கிறார்களென்றும் விளம்பரப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் யூனியன் சர்க்காரிலுள்ள மந்திரிகளும், ராஜ்ய மந்திரிகளும் தமது ராஜிநாமாக்களை பிரதம மந்திரியிடம் அனுப்பினார்கள். இந்த ராஜிநாமாக்களில் சிலவற்றை ஏற்றுக்கொண்டிருப்பதாக பிரதம மந்திரி அறிவித்தார். யூனியன் மந்திரிகள் சிலர் ஏற்கெனவே விலகிவிட்டனர். ஆனால், இன்னும் ராஜ்யங்களின் விவகாரம் முடிவடையவில்லை. இன்னும் சில தினங்களில் முதல் மந்திரிகள் ராஜிநாமாச் செய்யும் ராஜ்யங்களில் புதிய முதல் மந்திரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவார்கள். யூனியன் மந்திரி சபையிலும், ராஜ்ய மந்திரி சபைகளிலும் உள்ள வேறு சில மந்திரிகளும் "ஸ்தாபன சேவைக்காக" விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது. எல்லா ராஜ்யங்களிலும் புதிய மந்திரிகள் பதவி ஏற்றுக்கொண்ட பிறகு இந்த இரண்டாவது ஜாபிதா வெளியிடப்படுவதாயிருக்கலாம். காம்ராஜ் திட்டத்தின் இன்றுள்ள நிலைமை இதுதான்.

இந்தத் திட்டம் எதிர்பார்த்த பலனை அளித்துக் கொண்டிருக்கிறதா? இதன் பலனாக காங்கிரஸ் ஸ்தாபனம் பலமடைந்து கொண்டிருக்கிறதா? ராஜ்யங்களில் உள்ள கோஷ்டிப் பூசல்கள் மறைந்து காங்கிரஸ்காரர்களிடம் ஒற்றுமை ஏற்பட்டு விட்டதா? ஒரு குறிப்பிட்ட லட்சியத்தை நோக்கிச் செல்லும் அரசியல் ஸ்தாபனமாக காங்கிரஸ் மாறிவிட்டதா? இந்தக் கேள்விகளுக்கு இவ்வளவு சீக்கிரத்தில் பதிலளிப்பது சற்றுக் கஷ்டமாயிருக்கலாம். மேலும் இந்தத் திட்டத்தினால் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி வெளியே உள்ளவர்களின் மதிப்பீட்டை விட, காங்கிரஸ் தலைமையினரே செய்யும் மதிப்பீடுதான் சரியானதாயிருக்கும். இன்று காங்கிரஸ் உள்ள நிலைமையில் நேருஜிதான் காங்கிரஸ். நேருஜியைப் பலப்படுத்துவதற்காகத்தான் இந்த ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்படுகின்றன என்று பகிரங்கமாகவே கூறப்பட்டிருக்கிறது. ஆகையால், காமராஜ் திட்டத்தின் வெற்றி, தோல்வியைப் பற்றி ஸ்ரீ நேரு என்ன நினைக்கிறார் என்பதுதான் முக்கியம்.

கொள்கைகள் அல்லது கருத்துகள் சம்பந்தமாக வேற்றுமைகள் இருந்தால் அவற்றை பேசித் தீர்த்துக்கொள்ள முடியும் ஆனால், இன்று காங்கிரஸ்காரர்களிடையே உள்ள வியாதி அதுவல்ல. அதிகாரப் பதவிகளை யார் வகிப்பது என்பது பற்றியதுதான் அவர்களுடைய சண்டை. "அவர்கள் மட்டும் இவ்வளவு வருஷங்களாகத் தொடர்ந்து மந்திரிகளாக இருக்கிறார்கள். நாமும்தான் ஏன் கொஞ்சகாலம் அந்தச் சுகத்தை அனுபவிக்கக் கூடாது?" என்று பல காங்கிரஸ்காரர்கள் நினைக்கிறார்கள். ஆனால், இந்த அதிருப்தியாளர் கோஷ்டி உள்ளே வரமுடியாமல் அதிகாரத்திலிருக்கும் கோஷ்டி தடுத்துக் கொண்டிருக்கிறது. இதற்கு விதம் விதமான காரணங்கள் சொல்லப்படலாம். ஆனால், பதவியிலிருப்பவர்கள் அது தம்முடைய உரிமை என்று நினைக்கிறார்கள். மற்றவர்கள் அங்குவர விரும்பினால் அது தம்முடைய ஜீவாதார உரிமைகளைப் பறிக்கும் முயற்சி என்றுகூடக் கருதுகிறார்கள். இதுதான் உண்மை. இது காங்கிரஸ்காரர்களுக்கே தெரியும். இந்தப் பதவிப்போட்டி உணர்ச்சி கட்டுமீறிப் போய்விடக்கூடிய நிலைமை உருவாகிக் கொண்டிருந்தது. இதைத் தடுப்பதற்காகத்தான் "காமராஜ் திட்டம்" வந்தது. ஆனால், இந்தத் திட்டத்தின் பலனாக கோஷ்டிப் பூசல் மறைந்துவிட்டதா? "இல்லை" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்ல முடியும்.

புதிய முதல் மந்திரிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ள ராஜ்யங்களில் உள்ள நிலைமையைப் பார்த்தால் இதைப் புரிந்து கொள்ளலாம். ராஜிநாமாச்செய்துவிட்டு "சேவை" செய்வதற்காக வெளியே வரும் முதல் மந்திரிகள் பலரை எதிர் பார்க்காத "கர்ம வீரர்களாக" வரவில்லை. தமக்கு அடுத்தபடியாக முதல் மந்திரி பதவிக்கு வருபவர் தன்னுடைய கோஷ்டியைச் சேர்ந்தவராயிருக்க வேண்டும் அல்லது தன்னுடைய ஆளாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். சென்னை ராஜ்யம் இதற்கு விலக்காயிருக்கலாம். ஒவ்வொரு ராஜ்யத்திலுமே இந்தப் போக்கு காணப்படுகிறது. சென்னை, ஒரிஸா, மத்தியப் பிரதேசம், உ. பி., பீஹார், காஷ்மீர் ஆகிய ராஜ்யங்களில் புது முதல் மந்திரிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த ராஜ்யங்களின் முதல் மந்திரிகள் தமக்கடுத்தபடியாக யார் வரவேண்டும் என்பதை அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஆதரவாகப் பிரசாரமும் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய நடவடிக்கைகள் ரயிலில் பிரயாணம் செய்யும் மூன்றாவது வகுப்புப் பிரயாணியின் நடவடிக்கையைப் போலவே இருக்கிறது. ஒரு பிரயாணி ரயிலில் ஏறுகிறார், கூட்டம்

(10-ம் பக்கம் பார்க்க)

### பாரதியின் பாடல்களை மொழிபெயர்க்கும் தகுதி இந்திப் பெண்ணுக்கு இல்லை!

### புலம்புகிறார் பொறுப்பாளர்!



இந்தி இலக்கியம் இல்லாத மொழி, இலக்கணம் இல்லாத மொழி, வார்த்தை வளம் குறைந்த மொழி அதனால்அது ஆட்சிமொழியாவதற்குத் தகுதியில்லை என்று நாம் ஆதாரத்தோடு சொல்லி வந்தோம்அல்லவா? அதைக் காங்கிரஸ்காரர்களும், கம்யூனிஸ்டுகளும் கூப்பாடு போட்டு மறுத்து வந்தார்கள். இதோ—இந்தி மொழிபெயர்ப்புப் பகுதியில் உள்ள சென்னை சாகித்ய அகாடமியின் செயலாளர் டாக்டர் கே. எம். ஜார்ஜ் இந்தி மொழியின் இலட்சணத்தைக் கூறுகிறார் கேளுங்கள்.


"புரட்சிக் கவிஞர் மகாகவி பாரதியின் பாடல்களைப் பிற மொழிகளில் மொழிபெயர்ப்பதில் சாகித்ய அகாடமி மிகுந்த கஷ்ட நிலைக்கு உள்ளாகியது! சாகித்ய அகாடமியின் சார்பில் இந்தி மொழிபெயர்ப்பின்மூலம் வெளியிடப்பட்டுள்ள பாரதி பாடல்கள் வெற்றி பெறும் அளவில் இல்லை! மலையாள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பாரதி பாடல்கள் மிகவும் சிறப்பாக இருக்கிறது."

கேட்டீர்களா—மகா கவிஞன் பாரதியின் பாடல்களை உலகத்தில் பல மொழிகளில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். எல்லா மொழிபெயர்ப்பும் வெற்றிகரமாக முடிந்திருக்கிறது. ஆனால் நாற்பத்திநாலரைக் கோடி மக்களில் பெரும்பாலோரால் பேசப்படுவதாகப் பீத்திக் கொள்ளப்படும் மொழியில்—மெஜாரிட்டியில் மிருகபலம் பெற்றிருக்கும் மொழியான இந்தியால் பாரதியின் பாடல்களைச் சீராக மொழிபெயர்க்க முடியவில்லையாம். மொழிபெயர்ப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டதாம். புலம்புகிறார் அகாடமியின் செயலாளர் ஜார்ஜ்.

ஆனால் மலையாள மொழிபெயர்ப்பு வெற்றிகரமாக முடிந்திருக்கிறதாம். இதையும் அவரேதான் சொல்லுகிறார்.

ஓ...காங்கிரஸ்காரர்களே—இந்தி மொழி வெறியர்களே உங்களுக்குக் காது கேட்கிறதா? இலக்கிய இனிமையும்-புரட்சிக் கருத்தும் நிறைந்த பாரதியாரின் பாடல்களை மொழிபெயர்க்கத் தகுதியற்ற இந்திமொழி-ஒன்பதரைக் கோடிக்கும் அதிகமான திராவிட மக்கள் மீது ஆதிக்கம் செலுத்த வருகிறதா? அதை நாம்ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டுமா?

மூளி மொழிக்கு முந்தானை விரிப்போரே சொல்லுங்கள்! உங்களுக்கென்ன மானம் வெட்கம் மருந்துக்கும் இல்லையா?




தென்னகத் தலைவன்

மலர் 1 | 22-9-63 | இதழ் 39

# ஊமைத்துரை சீமையிலே உரிமைக் குரல்!

நெல்லையின் வரலாறு எப்போதுமே பொன்னான நிகழ்ச்சிகளைப் பதித்துக் கொள்வதில் முந்திவிடும்.

களவெண்பாக்களையும் நளவெண்பாக்களையும் தந்த, தமிழ்க் கவிஞர்களும் அரசர்களும் அந்த மண்ணில்தான் உலவினர்!

தண்ணார் குற்றால நறுஞ்சாரல் எனும் பெண்ணாரும் நம்மை சேர்ந்து மகிழ்விப்பதும் அந்த மண்ணில்தான்.

முதுக்குளிப்பதொரு மேலைக் கடலினிலே என்று பாடினானே அந்தப் பெருமையை அள்ளிவரும் அலைகள் விளையாடும் தூத்துக்குடி அங்கேதான் இருக்கிறது.

பாடிய புலவன் பாரதியும் கிளைத்ததுகூட அந்த மண்ணில்தான்.

அவன் பாட்டோடு புரட்சி வேட்டையும் முழக்கிய வ. உ. சி., தீவிரவாதம் வளர்த்தது—

ராட்டையில் நூற்கும் ''அற்புத''த்தைச் செய்யாமல், சிங்களத் தீவினுக்குக் கலம் விட்டதும் அந்த மண்ணில்தான்!

கடவுளும் தமிழ்ப்பாட்டுக்குப் பணிவான் என்று பாடிய குமரகுருபரனும் அங்கேதான் பிறந்தான்.

ஓதும் தமிழுக்கு யாதும் இணை இல்லை என்று முறுக்கிய மீசையும் செறுக்கியப் பெருமையும் கொண்டு இந்திக்கு அடி கொடுத்த நாவலர் பாரதியைத் தந்ததும் இந்த மண்ணே!

இத்தனை புகழுக்கும் உரிய நெல்லைச் சீமையில் கழக மறவர்கள் கூடி இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்திய பெருந்திறல் காட்சி-நினைவை விட்டகலாதது; வரலாறு இதுவரை புகலாதது.

எந்த இடத்தில் வெள்ளைத் துரைகளின் சிறைதப்பிய ஊமைத்துரை வெளியேறினானோ, அந்த இடத்திலிருந்து நம் மறவர்கள் புறப்பட்டனர்—ஊர்வலமாக.

''இந்தியின் ஆதிக்கத்தைத் தகர்ப்போம்'' என்று குரல் கொடுக்க—''தமிழ்க் குழம்பு இருக்க வடக்கத்தி சாம்பார் ஏன்? நமது சோறு இருக்க அவனது சாதம் ஏன்? தமிழருக்கென்று விழா இருக்க நாளும் குளியாதான் பண்டிகை ஏன்?'' என்றெல்லாம் வினாயெழுப்பிய ரா. பி. சேதுப்பிள்ளை எந்த நெல்லைக்கு நகராட்சித் துணைத் தலைவராக இருந்தாரோ, அந்த நெல்லையின் வீதிகளில் அவர்கள் உலா வந்தார்கள்.

இந்திப் பகையை நொறுக்க நாங்களும் தோள்கொடுப்போம் என்று எந்தக் காயிதே மில்லத் வந்திருக்கிறாரோ-அந்தக் காயிதே மில்லத் பிறந்த மண்ணில்-பேட்டையில் கூடி அவர்கள் மாநாடு நடத்தினார்கள்.

அமைப்புச் செயலாளர் என்.வி.என்., தூத்துக்குடி தந்த ஒளிமுத்து சிவசாமி ஆகியோர் செயலாளராக முன்னின்று நடத்திய அந்த மாநாட்டில் அண்ணன் தெளிவாகவே சொல்லி விட்டார்.

''ஆண்டுக்கணகில் சிறையிருந்தாலும் சரி, எடுத்த கொள்கையை முடித்தே தீருவேன்''என்று-அவர் தெளிவாகவேகாட்டி விட்டார்.

சிறையின் அகன்ற வாய்கள்-சித்திரவதை புரியும் தனிமைச் சூழல்-பார்த்துப் பழகிய உறவையும்-ஊரையும் பிரித்து வைக்கும் கொடுமை-கட்டிளங் காளைகளாக உள்ளே சென்றவர்களை. வெட்டுண்ட வாழைக்காய்களாய்-வெறும் சடலங்களாய் அனுப்பி வைக்கும் மரணக் கூத்து ஆகிய அனைத்தும் அண்ணனுக்கும் மனப்பாடம். அத்துணை தெரித்திருந்தும், தானும் தன் தம்பிகளும் ஒரு கொள்கைக்காக சில காலம் வாடுதல் பெரிதில்லை என்ற முடிவுக்கு வந்தே இதைத் தெரிவித்திருக்கிறார்.

உணர்வு கொந்தளிக்கும் கலைஞர் மு. கருணாநிதியும் ''சாகவும் தயார்; சுடு தீயில் வேகவும் தயார், அன்னைத் தமிழைச் சூழ்ந்த விலங்கை உடைப்பதற்காக'' என்று கூறியிருக்கிறார்.

காமராசரோ, வழக்கம் போலவே ஒரு கை பார்க்கிறேன் என்கிறார்.

ஒருகை பார்க்கப் போகிறாராம்! இவரென்ன ஆலமரத்தடி ஜோசியரா, கைபார்ப்பதற்கு?

காமராசரே! முடிந்தால் பாருங்கள்! ஆனால், இப்போதே உங்கள் முகத்தில பூசப்பட்டு விட்ட கரியையும் பாருங்கள்!

எத்தி எத்தி வாழ்வது-ஏமாற்றி ஏமாற்றி வாழ்வது, எத்துணை நாளைக்குத்தான் நடக்கும்? இல்லை! உம்மிரட்டல்தான் எத்துணை நாளைக்குப் பலிக்கும்?

அன்றொரு நாள் அப்படித்தான் சொன்னீர், ''இந்தக் கழகத்துக்காரன் எல்லாம் எழுதவொட்டாமல், அவனுக கட்டை விரலை வாங்கிவிடுவேன்'' என்று.

என்ன நடந்தது? அன்று எங்களைப்பற்றி நாங்கள் மட்டுமே எழுதிக்கொண்டிருந்தோம். இன்றோ-உமது உறுமலுக்குப் பின்னரோ-உலகமே எங்களைப்பற்றி எழுதுகிறது. தமிழகத்தில் சில ஏடுகள் எங்களைப்பற்றி எழுதுவதாலேயே ஜீவித்துக் கொண்டிருக்கின்றன.

அரசியல் சாணக்கியர் எனப்பட்ட ஆச்சாரியார் அவர்களே, 1938-ல் எங்களிடம் தனியாகத் தோற்றார்.

இன்றோ எங்கள் கோரிக்கையின் நியாயம் உணர்ந்து பல தரப்பினரும் எங்களுக்குத் தோள்கொடுக்கின்றனர்; தார்மீக ஆதரவு தருகின்றனர். சொல்லப்போனால், அன்று எதிர்த்துப் போரிட்ட ஆச்சாரியாரே இன்று துணை நிற்கிறார்.

காமராசரே! வாரும்! வாரும்! நிலப்பிரபுத்துவம் கொடுங்கோலோச்சுகிற-ஜாதி வெறி இன்னும்தலைவிரித்தாடுகிற நெல்லையிலேயே எங்களுக்கு இத்துணை வலிவென்றால்...

நீங்களே கணக்குப் போட்டுக் கொள்ளுங்கள். சாமர்த்தியம் இருந்தால்.

''பதினேழு தொகுதிகளையும் காங்கிரசுக்கே பரிந்தளித்த திருமண்ணன்றோ? பழம்பெரும் காங்கிரசுத் தியாகி-வெள்ளையனை தன் பூட்ஸ் காலால் எட்டி உதைத்த வீரர் திரு. டி.டி.கே.யைப் போட்டியின்றித் தேர்ந்தெடுத்த பூமியல்லவோ?'' என்று காங்கிரசார் நெல்லையை மகிழ்ந்து கொண்டாடுவதுண்டு. அந்த நெல்லையிலேதான் தம்பிமார்களின் புரட்சிக் கோலம்! அண்ணன் தலைமையில் அணிவகுப்பு!

காமராசரே! இப்போது இந்தி எதிர்ப்பு மட்டும் உமக்குப் பிரச்சினையாகவில்லை. அரசியல் ரீதியிலும் உமக்கு மற்றோர் சம்மட்டியடியாக வந்துவிட்டது நெல்லை எழுச்சி.

கே. வி. கே. சாமியும் தாளமுத்தும் எந்தக் கொள்கைக்காக ரத்தம் கொட்டினரோ, அந்தக் கொள்கை வலுப்பெற்று, உரம் பெற்று, நெல்லையில் காலூன்றிவிட்டது என்பதற்கு அத்தாட்சியாகத்தான் அந்த ஊர்வல மாட்சியும், மாநாட்டுச் சிறப்பும் அமைந்திருக்கின்றன.

எனவே காமராசர் இனி நெல்லையில் ஏற்பட்டுள்ள புது எழுச்சிக்கும் பதில் சொல்லியாகவேண்டும்.

இப்போது எழுந்துள்ள தமிழுணர்ச்சிக்கு எந்த அணை போட்டாலும் தடுக்க முடியாது என்பதைக் காமராசர் புரிந்து கொள்ளவேண்டும்.

தீயென்றறியாது தொடுபவன் அப்பாவி.

தீயென்றறிந்தும் வாலாட்டுபவன் முட்டாள்.

தீயினைத் தகுந்த முறையில் கையாள்பவன் புத்திசாலி!

இதில் காங்கிரசார் எந்தரகம்? நாளைய வரலாறு இதற்குப் பதிலளித்தே தீரும்!

# கலைஞர் வீட்டுத் திருமணம், அனைவரும் வந்து ஆசி கூறினர்!



மேடையில்: மணமகள் மல்லிகா, மணமகன் முரசொலி மாறன், அறிஞர் அண்ணு, பக்தவத்சலம், ராஜாஜி, ராஜா சர் முத்தையா செட்டியார், தர்மலிங்கம் எம். பி., முல்லை வடிவேலு, நாவலர் நெடுஞ்செழியன், என். வி. நடராசன், இளமுருகு பொற்செல்வி ஆகியோர்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மேனியும் வரட்சி படிந்த உள்ளமும் கொண்டவன். அவன் சிரித்து யாருமேபார்த்ததில்லை. எப்போதும் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் தன்மை. ஆரவாரமில்லாத அவன் வாழ்க்கையும்' அமைதியான நடவடிக்கைகளும்சுகுமாரன் நாயரை எல்லோரிடமுமிருந்து விலக்கி சற்று தொலைவிலேயே நிறுத்தி வைத்திருந்தன.

வடக்கே எங்கோவேலையாக போனவனை மூன்று மாதம் கழிந்து யாரோ உயிர்ஊசலாடு மளவிற்கு அடித்துப் போட்டு விட்டார்கள் என்ற சேதி வந்தது. இரண்டு நாள் கழித்து, கட்டுக்காயங்களோடு அவனை வீட்டில் கொண்டுவந்து போட்டார்கள். சில நாட்களுக்கு போலீசார் அடிக்கடிவந்து விசாரித்துப் போனார்கள். இழுத்துப் பறித்துக்கொண்டிருந்த உயிர் ஒருநாள் அந்திபடியும் நேரத்தில் பிரிந்து விட்டது. யாரோ சிலர் வந்தார்கள், போனார்கள், எல்லாம் முடிந்தது.

அந்த வீட்டில் அழுகைச் சத்தம்கூட கேட்கவில்லை.

அம்மணி எப்போதும் போலவே இருந்தாள். இருந்தாற்போல ஒருநாள் அந்த வீட்டு வாசலில் கார் வந்து நின்றது. எவனோ ஒரு புதியவன் அவசர அவசரமாக உள்ளே போனான் சிறிது கழித்து வெளியே வந்து காரில் ஏறிச் சென்றான். தெருவிலிருந்தவர்களுக்கு முதன் முதலில் அதிசயமாகத் தென்பட்ட இந்த விவகாரம் அவன் அடிக்கடி வந்து போனதால், பிறகு சலித்துப் போயிற்று.

ஒரு நாள் திரும்பிப்போன காரில் அவன் இல்லை; அவன் அங்கேயே தங்கிவிட்டான்! பெண்களின் குழாயடிப் பேச்சிலே வியப்போடு ஆரம்பித்த அந்த சங்கதி கடைசியில் வெறுப்பிலேதான் முடிந்தது!

'இரண்டாவது மாப்பிள்ளை!' என்றாள் ஒருத்தி.

"இவன்தான் முதல் மாப்பிள்ளை; பழையபடி வந்தாகி விட்டது!"

"ஆள் நன்றாகத்தானே இருக்கிறான்!" என்றாள் மற்றொருத்தி.

"உனக்குப் பிடிச்சிருந்தா சரி" குறும்புக்காரி ஒருத்தி உரக்கச் சிரித்தாள். ஊர்எதையெல்லாமோ பேசிக்கொண்டது. அந்த மஞ்சள் மாடி வீடு எப்போதும் போலத்தான் இருந்தது.

ஃ ஃ ஃ

திருவேங்கடம் வாசலில் நின்றான்.

கண்ணடிமுன்னின்றுபார்த்துவிட்டு வெளியே வந்தாள் இந்திராணி. பூவும், பவுடருமாக அங்கே கமழ்ந்தது; பறக்கும் பட்டாம் பூச்சிகளைப் பின்னிய பட்டு ரவிக்கையும், சிவப்பு நிறச் சேலையும் அழகை எடுத்துக் காட்ட அவன் முன்னே அவள் நின்றபோது ஒரு விநாடி திருவேங்கடம் பேதலித்துத் தான் போய்விட்டான்!

"எண்ணெய்ச் சட்டியை இறக்கி வச்சிருக்கு எடுத்து பரணியிலே விட்டுடுங்க."

அவசர அவசரமாக சொல்லி விட்டுப் போகும் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான் திருவேங்கடம். மாடி வீட்டின் இருண்டதாள்வாரத்தில் அவள் மறையும் வரை பார்த்துக் கொண்டே நின்றான், ஏதோ சூன்யத்தில் தொட்டுத் துழாவுவதைப்போல அவன் உணர்ச்சிகள் வெறுமையில் கசந்தன. துடைத்துவிட்டிருந்த மிட்டாய் வண்டியின் கண்ணடிகள் முற்றத்து வெயிலில் பளிச்சிட்டன.

பரபரப்போடு பீடியை எடுத்தான் திருவேங்கடம். நெருப்புப் பெட்டியைக் காணவில்லை. உள்ளே சென்று புகையால் கருத்து போயிருந்த அடுக்களை அலமாரியில் துழாவினான்! பழைய பெருங்காய டப்பி ஒன்று திறந்து கிடந்தது. அதனுள்ளே மூன்று பத்து ரூபாய் நோட்டுகள் மடக்கு கலையாமல் கிடந்தன. கையிலே எடுத்துப் பார்த்தான்; அவ்வளவும் புதிய நோட்டுகள்!

"ஏது இந்தப் பணம்?" இதற்கு மேல் அவன் புத்திக்கு எதுவுமே தட்டுப்படவில்லை. கதவைப் பூட்டிவிட்டு சிறிது நேரம் தயங்கி நின்றான். சாவியை கதவின் மேலே உத்திரத்தின் ஓரமாக வைத்துவிட்டு வெளியே வந்தான்.

வெயிலின் கடுமை குறைந்து வானம் மப்பு போட்டிருந்தது. கண்களை சுருக்கிக்கொண்டு அசட்டுத்தனத்தோடு பார்த்த அவன் எதையோ நினைத்துக் கொண்டவன் போல அவசர அவசரமாக வண்டியைத் தள்ளிக்கொண்டு போனான்.

திரும்பி வரும்போது நல்ல மழை பிடித்துக்கொண்டது. வண்டியை முற்றத்திலே அப்படியே விட்டு விட்டு,வாசலருகே வந்து நனைந்து போயிருந்த மேல்துண்டைப் பிழிந்துகொண்டான் திருவேங்கடம். உத்தரத்திலே கையை நீட்டியபோது சாவி வைத்த இடத்திலேயே இருந்தது.

அவள் இன்னும் வரவில்லை.

கதவைத் திறந்து உள்ளே போய் தலையைநன்றாகத் துவட்டிக் கொண்டுவிட்டு கட்டிலில் உட்கார்ந்தான். மாலை மயங்க இன்னும்நேரமிருந்தாலும் மழை வேளை மங்கிய இருளை எங்கும் இழைய விட்டிருந்தது. மாடி வீட்டில் விளக்குகள் எரிந்தன. சிரிப்பும், கும்மாளமும் லேசாகக் கேட்டன.

வாசலில் நிழல் தட்டிற்று.

கொண்டு வந்த குடையை தாழ்வாரத்தில் வைத்துவிட்டு உள்ளே வந்தாள் இந்திராணி.

"இப்போதான் வந்தீங்களா?"

"உம்..."

வந்ததைப் பார்த்துவிட்டு தான் அவளும் வந்திருக்கிறாள். பிறகு எதற்கு இந்தக் கேள்வி? அவன் நினைப்பு இப்படிப் போயிற்று.

"குடையைக்கொண்டுபோய் கொடுத்திட்டு வாங்க."

அந்தக் குரலில் தொனித்தது வேண்டுகோளா, கட்டளையா என்றே அவனுக்குத் தெரியவில்லை. அங்கேயே அமைதியாக உட்கார்ந்திருந்தான்.

"இந்தாங்க, சித்தே போயிட்டுதான்வாங்க. அவங்க வெளியே காத்திருப்பாங்க."

குரல் சற்று உரக்கக் கேட்டாலும்சிறிது குழைவு இருந்தது. திருவேங்கடம் நிமிர்ந்து உட்கார்ந்து உள்ளே பார்த்தான். அவள் உடைமாற்றிக்கொண்டிருப்பது அந்த மங்கியவெளிச்சத்தில் தெரிந்தது. உள்ளாடையில் மதமதப்பான உடல் பளபளத்தது. கழுத்தின் கீழும், தோளின்சரிவிலும்,அடிவயிற்று மடிப்பிலும் வெண்மை பளீரிட்டது.

கண்களைச் சுருக்கிக்கொண்டு பார்த்த திருவேங்கடம் எழுந்து போய் குடையை எடுத்துக் கொண்டான். புதிய குடை அதன் கைப்பிடியில் ஏதோ படம் கூடப் போட்டிருந்தது.

மாடிவீட்டு வாசலுக்குப் போனதும் அங்கே கதவருகே; இருவர் நிற்பது தெரிந்தது. அவன் அதற்குமுன் அவர்களைப் பார்த்ததேயில்லை. ஒருவன் முகத்திலே நல்ல செழுமையும், களையும் இருந்தன. கம்பீரமான தோற்றம்; சட்டையும் வேஷ்டியும் வெள்ளை வெளேரென்றிருந்தன. கூட இருந்தவனுக்கு ஒடிந்து விழுவது போன்ற உடல்; கையிலே பற்றவைத்திருந்த சிகரெட்டை அப்படியே முழுசாக வைத்திருந்தான். திருவேங்கடத்தையே கூர்ந்து கவனித்தபடி அவன் குடையை வாங்கிக்கொண்டான். எதையோ சொல்லி சிரித்துக்கொண்டிருந்தவர்கள் அவனைப் பார்த்ததும்பேச்சைநிறுத்திக்கொண்டார்கள்.

(10-ம் பக்கம் பார்க்க)

பிரிவினைக் கோரிக்கையை தி.மு.கழகம் கைவிட்டுவிட்டது என்றும் - தடைச்சட்டத்திற்கு அஞ்சி ஒடுங்கிவிட்டார்கள் என்றும்இரத்தம் சிந்தியேனும் பிரிவினையைத்தடுப்போம் என்றும் கம்யூனிஸ்ட்டுகளும், மற்ற சில்லரைகளும் கூப்பாடு போடுகிருர்கள். இவர்களின் கடந்த கால நிலைமை என்ன என்பதையும்–நமது எதிர்காலத் திட்டம் என்ன என்பதையும் படம்பிடித்துக் காட்டும் சிறந்த கட்டுரை இது.

# திராவிடநாடு பிரிவினையும்-
# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும்!

“பன்னெடுங் காலமாக இருந்துவரும் ஒற்றுமையை சீர்குலைக்கும்படியாக பிரிவினை கோருகிறது தி. மு. க. ஆனல், கடைசி கம்யூனிஸ்ட் உயிர் இருக்கும்வரை பிரிவினையை அனுமதிக்க மாட்டோம்.” இப்படி ஊருக்கு ஊர் ஒப்பாரி வைத்துக்கொண்டு திரிகிருர்கள் அருமைக் கம்யூனிஸ்டுகள்.

பிரிவினைக் கோரிக்கையை-தமிழக காம்ரேடுகள் மட்டுமல்ல-ஆல் இண்டிய காம்ரேடுகளும் எதிர்க்கிருர்கள். தி. மு. க.வின் உறுதியான இந்த இலட்சியத்தை எதிர்க்கும் காம்ரேடுகளின் நிலையோ பரிதாபத்திற்குரியது.

“பண்பாடு வழியாகவும், அரசியல் வழியாகவும், இந்தியா என்றுமே ஒரே நாடாக இருந்ததில்லை.” இப்படிக் கூறியவர் தி. மு. க.வைச் சேர்ந்தவரல்லர் வடநாட்டைச் சேர்ந்த “பிரேம்நாத் பஜாஜ்” என்பவர் *1961*-ம் ஆண்டு அக்டோபர் மாதம் *10*-ந்தேதி டெல்லியிலே பேசியிருக்கிருர். அவருடைய கூற்றை மறுத்துக் கூறும் ஆற்றல்-காம்ரேடு புபேஸ் குப்தாவிற்கு இருக்கிறதா...?

திராவிடத்தை வடக்கோடு வெள்ளையன் இணைத்துவிட்டதைப் பயன்படுத்திக்கொண்டு, தென்னகத்தை சுரண்டும் திருப்பணியில் இறங்கியிருக்கும் வடநாட்டுக் கொள்ளையர்களின் காலைக் கழுவும் கும்பலோடு-காம்ரேடுகளும் கூடி விளையாடுகிருர்கள்.

“இந்தியா ஒரு நாடு என்ற தத்துவம்-குஜராத்தி, மார்வாடிகளின் சுரண்டல் வேலை.” இவ்வாறு சோவியத்தின் இந்திய நிபுணர் “டயகோஸ்” என்பார் கூறியிருக்கிருர். திரு. டயகோஸ் கூறியபடித்தான், குஜராத்திலும்-மார்வாரிகளும்-டால்மியாக்களும் சுரண்டிக் கொழுக்கும் சந்தைக் கூடமாக திராவிடத்தைப் பயன்படுத்தி வருவதை நல்ல உள்ளம் படைத்த எவரும் மறுக்க முடியாது. ஆனல், காம்ரேடுகள் மறுப்பார்கள். ஏனெனில், அவர்களது பார்வை எல்லாம் குருச்சேவ் மீதும் - மாசேதுங் மீதும்தான் இருக்கும்.

இன்றுள்ள அரசியல் வழி ஒற்றுமை நூற்றூண்டுக்கு உட்பட்டதாகும். *18*-ம் நூற்றூண்டின் துவக்கத்தில், *1707*-ல் ஔரங்கசீப் காலமானதற்குப் பின்னர், இந்தியாவில் மொகலாயப் பேரரசு சீர்குலைய ஆரம்பித்தது. *1739*-ல் ‘நாதர்சா’ இந்தியாமீது படை எடுத்து டெல்லியை வெற்றி பெற்றதையடுத்து, இந்தியாவின் தலைநகரில் எண்ணற்ற மக்கள் கொல்லப்பட்டனர். மொகலாயப் பேரரசின் மதிப்பு, அதிகாரம் ஆகியவற்றிற்கு மட்டுமல்லாது, மொகலாய அரசிற்கே ஒரு மரண அடியாக அமைந்துவிட்டது.

மொகலாய ஆட்சியை ஒழித்துக்கட்டுவதில், மராட்டியர்கள் பெரும் பங்கு கொண்டு பல்வேறு முனைகளில் தாக்கினர். அவர்கள் இந்தியாவின் மேற்கிலிருந்து கிழக்குவரை பரவி ஆதிக்கம் செலுத்தினர். *1756-57*-ல் நடந்த பாணிப்பட்டு, பிளாசி யுத்தங்கள் இந்திய வரலாற்றில் ஓர் புதிய திருப்பு முனையை உண்டாக்கியது. பிளாசி யுத்தம் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடிகோலியது.

நாற்பதாண்டுக்குள், பிரிட்டிஷார் இந்திய மண்ணில் உறுதியாகவும், நெருக்கமாகவும், இடம்பெற்று, இந்தியாவின் பல பகுதிகளிலும் குறிப்பாக தென் இந்தியாவிலும், கிழக்கு மேற்கு பகுதிகளிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டனர். அடுத்தாற்போல் *20*-ஆண்டுகளில் மராட்டிய மன்னர்களை எல்லாம் ஒழித்துவிட்டு, பஞ்சாப் தவிர இந்தியா முழுமையிலும் ஆளுபவர்களாகி விட்டனர். அடுத்த பத்தாண்டுகளில் *1839*-ல் “மகாராஜ ரஞ்சித் சிங்” இறந்த பிறகு, பஞ்சாபும் பிரிட்டீசாருக்கு அடிபணிந்தது.

இந்த அரசியல் வழி ஒற்றுமையும், பிணைப்பும் நூற்றூண்டுக் கணக்கில் உருவாகி வந்தவையல்ல என்பதும் *1757*-க்குப் பிறகு இந்தியாவிலேயே தங்கிவிட்ட பிரிட்டீசாரின் கொள்கைகளும், நடவடிக்கைகளும்தான் உருவாக்கப்பட்டது என்பதை இதன் மூலம் நன்கு புரிந்துகொள்ளலாம்.

“இந்தியா” அல்லது “பாரத” ஒற்றுமை என்பதெல்லாம் உண்மையில், இத்துணைக் கண்டத்தை ஆட்சி செய்த பிரிட்டீசாரின், ஆட்சியின் விளைவாக கிடைத்தது என்பவை எந்த தேசியத்தவனும் சரி, கம்யூனிஸ் கூட்டமும் சரி மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இந்நிலையில், ஒற்றுமை கீதம் பாடிட நினைக்கிருர்கள். இது நடக்கக் கூடியவையல்ல. உளுத்துப்போன தேசியம் பேசி ஒன்ருக்க நினைப்பது முட்டாள்தனம் என்பதை அறிவோம்.

*1947*-ல் இந்திய அரசியல் வழி ஒற்றுமை உடைந்துவிட்டது. “இந்தியா” என்றும் “பாகிஸ்தான்” என்றும் இரு

(8-ம் பக்கம் பார்க்க)

## முத்திரைக் கேள்வி

**கேள்வி :—கவிஞர் கண்ணதாசன், த. தே. க. அரசியலை விட்டு—வேருெரு இயக்கத்திற்கு வந்துவிடுவார் என்று பேசிக்கொள்ளப் படுகிறதே—உண்மைதானு? வந்துவிடுவாரா?**

**—சி. மாணிக்கம்,**
**அனகாபுத்தூர்.**

பதில் :—நீங்கள் அதை விரும்புகிறீர்களா? இன்னும் சில ஆண்டுகளுக்கு அவர் எந்த அரசியல் இயக்கத்திலும் ஈடுபாடு கொள்ளாமல் கவிதையும்-பாடல்களும் எழுதிக் கொண்டிருப்பதே அவருக்குப் பெருமையும்-புகழும் தரும் பணி என்று கருதுகிறேன். தலைமுறை தலைமுறையாக பாரதி வாழப் போகிருன் என்ருல் அதற்குக் காரணம் அவன் படைத்து வைத்துவிட்டுப் போன சிறந்த—இனிய கவிதைக் கனிகளாகும். பாரதியின் இடம் பாரதிதாசனுக்கும் உண்டு! பாரதிதாசன் அவர்கள் எழுதிக் குவித்திருக்கும் ஆயிரக்கணக்கான கவிதை மலர்கள் உலகம் எனும் மலர்த்தோட்டத்தில் ஊழிக்காலம் முழுதும் வாழும் சக்தி படைத்தவை. கவிஞர் கண்ணதாசனும் அந்த எல்லையிலே அவர்களோடு வாழவேண்டும் என்று நாம் விரும்புகிருேம். ஆனல் பாரதியாரைப் போல்—பாரதிதாசனைப் போல் கண்ணதாசன் இன்னும் காலத்தாலழியாத மிகச் சிறந்த கவிதைகளை பெருவாரியாகப் படைக்கவில்லை. “மாங்கனி”, “பாண்டிமாதேவி”, “கல்லக்குடி மாகாவியம்”, “ஆட்டனத்தி ஆதிமந்தி”, “தைப்பாவை”—கண்ணதாசனின் சிறந்த காவியங்கள் இவ்வளவே! காலம் முழுவதும் புகழ் பாட இவை போதா! சினிமாப் பாடல்கள் நூறு நாட்களோடு சரி! வாழும் கவிஞர்களுக்கு அது கை கொடுக்காது. அதனல் தான் அவர் எந்த அரசியல் இயக்கத்திலும் ஈடுபடாமல், காலத்தால் அழியாத மிகச் சிறந்த காவியங்களை நூற்றுக்கணக்கில் உண்டாக்கித் தருவதிலேயே கவனம் செலுத்த வேண்டும் என்று நாம் விரும்புகிருேம்.



போலித் தலைவரான சம்பத்தின் த. தே. க. இயக்கத்தை அவர் விடாமல் கட்டி அழுது கொண்டிருந்தால் கண்ணதாசன் புகழ் வளர்வதற்கு வாய்ப்பில்லை. காலம் ஒரு நல்ல கவிஞரை இழந்துவிடும்.

# நாணல்

கற்கண்டு சிறுகதை

எழுதியவர் :

இரா. இளஞ்சேரன்

திருவேங்கடம் மிட்டாய்வண்டியைத் தள்ளிக்கொண்டுவந்து சுவரோரம் சாய்த்துவிட்டு முற்றத்திலே வந்து நின்ருன். சாணி தெளித்து இருளடர்ந்திருந்த மண்ணில் காலையில் போட்டிருந்த கோலம் கலைந்திருந்தது தலையில் கட்டியிருந்த துண்டை எடுத்து முகத்தைத் துடைத்துவிட்டு வாசலைப் பார்த்தான்.

கதவு பூட்டியிருந்தது.

அந்தி படிந்து இருளை மெழுகிய நேரம். தெரு விளக்குகள் பளிச்சென்று கண் சிமிட்டின.

"இந்திராணி! இந்திராணி!" இரண்டு முறை அழைத்தான். அலுத்து களைத்திருந்த அவனுக்கு சலனமற்ற அமைதி எரிச்சலைத்தான் தந்தது. அந்த சின்னஞ் சிறு தெருவுக்கே கம்பீரமாக நின்ற இரட்டை மாடி வீட்டை (அவன் ஏறிட்டுப் பார்த்தான். மாடியின் சாளரத்தில் விளக்கொளிதெரிந்தது. யாரோ உரக்க சிரிப்பதும் கேட்டது. சற்று கழிந்து ஏதோ ஒரு உருவம் எட்டிப் பார்த்து உள்ளே போவது போலிருந்தது. தொடர்ந்து சிறிது நேர சந்தடி ...யாரோ மாடிப்படியில் இறங்கி வந்தார்கள்.

பற்ற வைத்த பீடியைவெறுப்போடு அவன் வீசியெறிந்த போது இந்திராணிவந்துகொண்டிருந்தாள்.

"அக்கா கூப்பிட்டாங்க போயிருந்தேன். அவன் கேட்பதற்கு முன் அவளே சொல்லி வைத்தாள்.

"இருட்டி இவ்வளவு நேரமாச்சு விளக்குகூட வைக்காமே என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு?"

"விளையாட்டிலே நேரம் போனதே தெரியலே!"

"அப்படி என்னதான் விளையாட்டோ நடக்குது?"

"சீட்டு" பேச்சை முடிக்க விரும்புபவன் போலவே அவள் வாசலருகே சென்ருள்.

"ஓகோ!" அவன் குரலில் ஏளனம் தொனித்தது.

ஃ ஃ ஃ

உள்ளே நெருப்புக் குச்சி உராய்வதுகேட்டது. அரிக்கன் விளக்கின் ஒளியில் இந்திராணியின் முகம் தெரிந்தது. அதில் நிழலிட்டது குறும்பா, கேலியா, ஆத்திரமா என்றே தெரியவில்லை.

இருள் கன்னங் கரேலென்று வழிந்து கிடந்தது.

முற்றத்திலிருந்த வாளித் தண்ணீரில் முகத்தை கழுவிவிட்டு தாழ்வாரத்தில் வந்து உட்கார்ந்தான் திருவேங்கடம். சுவர் மாடத்தில் சிறு விளக்கை கொண்டு வந்து வைத்துவிட்டு இந்திராணி உள்ளே போனுள்.

தண்ணீர்விட்டசோறும் கிண்ணத்திலே குழம்பும் எதிரே இருப்பதை மறந்து அவன் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். சற்று தொலைவில், தெருவிலிருந்து ஒதுங்கியிருந்த பாத்திரக் கடையில் செப்புப் பாத்திரத்தை எவனே ஒருவன் உளியால் ஓங்கிஓங்கி தட்டிக்கொண்டிருந்தான். ஒவ்வொரு அடியும் நிதானம் தவருமல், இழை பிசகாமல் விழுந்தன. அந்த சத்தத்தை கேட்கும் போதெல்லாம் திருவேங்கடத்தின் மனதில் பரபரப்பு எழும்; ஏதோவொருவிதமானகொதிப்புசிறிது சிறிதாக வடிகட்டப்படுவதைப் போல, விரும்பாத ஒன்று அவனிடமிருந்து சோர்ந்து நழுவுவதை உணர்வான். அந்த அடியின் சந்தம் தொடர்ந்து கேட்டுக்கொண்டேயிருந்தது.

"சாப்பிடறதுதானே?"

அவளது குரல் திருவேங்கடத்தைக் கலைத்தது.

கட்டிலில் பாய்விரித்து தலையணைகளை தட்டிப்போட்டுவிட்டு மாடத்து விளக்கை எடுத்துக் கொண்டு இந்திராணி உள்ளே சென்றபோது அவன்சாப்பிட்டுவிட்டு எழுந்துவிட்டான்.

இருவரும் பேசவேயில்லை. அடித்துப் போட்ட அமைதியில் அந்த வீடு தோய்ந்துகிடந்தது.

கட்டிலில் உட்கார்ந்தவன் சட்டைப் பையைத் துழாவி பீடியை எடுத்து பற்ற வைத்தான். உள்ளே இழுத்த புகையோடு பெருமூச்சும் வெளிவந்தது. அந்த மங்கிய வெளிச்சத்தில் பீடி நுனியில் நெருப்பு செக்கச் செவேலென்று கனன்றது. உள்ளே இந்திராணி படுக்கையை உதறிப்போடுவதுகேட்டது. அவன் மனதில் ஏதோ நிழல் தட்டியது போல...

"சாப்பிடலையா?"

"இல்லே."

அமைதி.

"அக்கா வீட்டிலே சாப்பிட்டேன்"

"உம்" திருவேங்கடம்புரண்டு படுத்தான். தெருவிலே அரவம் அடங்கியிருந்தது. முற்றத்தில் மண்டிக் கிடந்த செம்பருத்தி செடிகளின் கிளைகளிடையே

மிட்டாய் வண்டியின் கண்ணடிகளைத் துடைத்துவிட்டு, விடிந்த பொழுதின் இயல்பான உற்சாகத்தோடு ஏதோவொரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தான் திருவேங்கடம். எங்கிருந்தோ ஒரு சிறுமி வியர்க்க, வியர்க்கஓடிவந்தாள். பத்து வயதிருக்கும். பெரிய கண்கள் மிரளமிரள எதையோ பார்த்தன.

"ஏய், எங்கே ஓடறே!" ஒரு அதட்டல்; முகத்தின் புன்சிரிப்பு அவனைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

"வந்து..." இயற்கையிலேயே பெரிதான அவள் கண்கள் இன்னும் விரிந்தன. இதற்குள் இந்திராணி வெளியே வந்தாள்.

"என்ன செல்லம், எங்கே வந்தே?"

"அக்கா உன்னை சீக்கிரம் வரச் சொல்லிச்சி" சொல்லி முடித்த சிறுமி வந்த வேகத்திலே ஓடிவிட்டாள். திருவேங்கடம் உரக்கச் சிரித்தான். அவள் அவனைப் பார்த்த பார்வையில் ஏளனமும், கொதிப்பும் படிந்திருந்தது.

"நல்ல அக்கா...விடிய வேண்டாமா, அதுக்குள்ளே சீட்டாட்டம்!"

"அவங்க ரொம்பநல்லவங்க. உங்களைப்போல இல்லே!" குமுறலைக் கொட்டிவிட்டு அவள் உள்ளே போனுள். திருவேங்கடம் வேலையில் முனைந்தான்.

ஃ ஃ ஃ

அந்த மாடிவீடு கட்டிமுடித்த போதுதான் அவர்கள் அங்கே குடிவந்தார்கள். மலையாளத்தில் எங்கிருந்தோ திசைமாறி வந்த குடும்பம்: கணவனும் மனைவியும்தான்; குழந்தைகள் இல்லை. அவள் பெயர் அம்மணி, பார்த்தவனை திரும்பவும் பார்க்க வைக்கும் தோற்றம்; மதமதவென்று வளர்ந்திருந்த உடம்பும், அதிலே திளைத்த கவர்ச்சியும் புன்சிரிப்பு நெகிழும் பெரிய உதடுகளும் பெண்களைப் பார்த்ததும் கண்ணை வேறுபக்கம்திருப்பிக்கொள்ளும் திருவேங்கடத்தையே முதலில் திகைக்கவைத்தன. சுகுமாரன் நாயர் வற்றிய

(4-ம் பக்கம் பார்க்க)

## பாவமன்னிப்பு வேண்டுமாம்!

### 'காம்ரேட்' கதறுகிருர்!



கொஞ்ச காலம் கேரளத்தில் மந்திரி சபை அமைத்திருந்தார்கள் அல்லவா கம்யூனிஸ்டுகள்! அந்த மந்திரிசபையில் கல்வி மந்திரியாக இருந்தவர் ஜோசப் முண்டசேரி! அவர் எழுதுகிருர் - தான் இத்தனை நாட்களாக கம்யூனிஸ்ட் கட்சியில் பணியாற்றியதற்காகவும் - அதன் நடவடிக்கைகளை செயல்படுத்தியதற்காகவும் மெத்த வருந்தி, அந்தப் பாவச் செயலில் ஈடுபட்டதற்காக தன்னை மன்னித்துவிடும்படி திருச்சூர் பிஷப்-டாக்டர் ஜார்ஜ் அலாபட்டுக்கு கீழ்க் கண்டவாறு தெரிவிக்கிருர்.

"நான் கம்யூனிஸ்ட் கட்சி மெம்பராக இல்லாவிடினும் என் எழுத்துக்களும், அரசியல் நடவடிக்கைகளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு உதவின. கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தீவிரமாக கலந்துகொண்டதற்கு வருந்துகிறேன். எதேச்சாதிகாரத்துடன் கூடியு கம்யூனிஸ்ட் இயக்கத்தால் மக்களுக்கு நன்மை விளையும் என்று நான் எப்பொழுதும் கருதியதில்லை." இவ்வாறு வருந்தி தன்னை மன்னிக்கும்படி பிஷப்பிடம் கண்ணீர் விடுகிருர் ஜோசப் முண்டசேரி.

கம்யூனிஸ்ட் கட்சியால் மக்களுக்கு நன்மை இல்லை என்று, இன்னும் எத்தனை பேர் இப்படிக் கட்சிக்குக் கல்லறை கட்டிவிட்டு வெளிவரப் போகிருர்களோ தெரியவில்லை!



# சித்திரம் பேசுதடி

**இந்தப் பகுதியில்—**

**காமராஜர் பேசுகிருர் !**



" நான் தான்
பேசுறேங்கிறேன்."

(டெலிபோன் மணி அடிக்கிறது. காமராஜர் எடுக்கிருர்.)

"நமஸ்காரம்! நான் தான்காமராஜ் பேசுறேன்னேன் ! என்ன கேக்குறிக...!"

............

"மந்திரிகள் விலகல் விவகாரமா? அதுலே எனக்கென்ன சம்பந்தமின்னே? நம்ம பிரதமர் திட்டமின்னே அது ! அந்தத் திட்டத்தினுலே எல்லா ராஜ்யங்களிலேயும் ஒரே குழப்பமும் சண்டையுமா இருக்குன்னு அதுக்கு நான் பொறுப்பில்லேங்கிறேன்!"

............

"யாரு...? பத்திரிகைகாரங்க தானே! அவா எழுதுவா! மேலிடத்திலே நடக்கிற விஷயம் அவாளுக்கு என்ன தெரியுமின்னே ! ஆனந்தவிகடன் பத்திரிகையிலேகூட இந்தத் திட்டத்தைக் குடுத்ததினுலே காந்திக்குச் சமமா நான் வளர்ந்திட்டதாக கார்ட்டுன் போட்டிருந்தா - எனக்கு ரொம்ப வருத்தமின்னே! காந்திக்குச் சமமா நான் ஆக முடியுமாங்கிறேன் ! பத்திரிகையெல்லாம் என்னை ஒரேயடியாப் புகழ்றதைப் பார்த்தாப் பயமாயிருக்குன்னே! அதுவும் தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் தூக்கி வச்சுதின்னு அவுங்க அரசியல்லே ஒன்னுமில்லாமே போயிடுவாங்கன்னே! பெரியார்லேயிருந்து சம்பத்துவரை இது நான் கண்ணுலே கண்ட உண்மையிங்கிறேன்!"

............

"என்ன ? திருவண்ணுமலை போனது வருத்தந்தான்- அதுக்கு இதுமாதிரித் திட்டத்தை நான் ஏன் தர்ரேங்கிறேன்! பதவியை விட்டிட்டுப் போய் கிராமம் கிராமமா அலைஞ்சாமட்டும் கட்சி வளர்ந்திடுமா என்ன? அதுக்கு மந்திரிக ஏன் விலகனுமின்னே? இது பிரதம மந்திரி நேரு உண்டாக்கின திட்டம். அதுனுலே இதைப்பத்தி நான் அதிகம் பேசக்கூடாதுங்கிறேன். அபீஸ் முகம்மது தோற்றுப் போனதும்-கிருபளானியும் லோகியாவும ஜெயிச்சு வந்ததும்-நேரு கொஞ்சங்கூட எதிர்பார்க்காத விஷயமின்னே! அதனுலே அவரு ரொம்ப அதிர்ச்சியடைந்து போயிட்டாரு! மத்த ராஜ்ய மந்திரி சபைகள்லேயும் ஒரே ஊழல்-போட்டி-பொருமை-பதவிச் சண்டை ஒரே ரகளைங்கிறேன். இது வளந்துகிட்டே போனு வெளிநாட்டிலே இந்தியாவுக்கு இருக்கிற மதிப்புப் போயிடுமின்னே ! இதையெல்லாம் சுத்தப் படுத்துறதுக்குத் தான்-தேர்தல் தோல்விகளைக் காட்டி-கட்சியைப் பலப்படுத்தனும்-மூத்த மந்திரிகள் எல்லாம் பதவியை ராஜினுமா செஞ்சிட்டு தியாக மனப்பான்மையோடு கட்சிக்குச் சேவை செய்யப் புறப்படனுமிங்கிற கருத்தை நேரு வெளியிட்டாருங்கிறேன் !"

............

"அதை ஏன்-என் தலையிலே தூக்கிப் போட்டாருன்னு கேக்கிறிகளா? இது பிரதமர் யோசனையின்னு எல்லா ராஜ்ய மந்திரிகளுக்கும் சந்தேகம் வந்திடுமின்னே ! பிடிக்காத ஆட்களையெல்லாம் தியாகம்ங்கிற பேரிலே வெளியே பிடிச்சுத் தள்ளிட்டு-லால்பகதூர் மாதிரி அவருக்கு வேண்டிய ஆட்களா பதவியிலே வைக்கப் பார்க்கிருரின்னு எல்லாரும் சத்தம்போட ஆரம்பிச்சிடுவாங்க! பிரதமரையே பிச்சுத் தின்னுடுவாங்கன்னே! அதனுலேதான் அதை எம்மேலே தூக்கிப் போட்டாரு! நீங்க சொன்னது மாதிரி திருவண்ணுமலைத் தோல்வியை வச்சுப் பாக்கிறப்போ எனக்கும் இது சரின்னு பட்டுச்சு!"

............

"இதுக்கு என்னை ஏன் தேர்ந்தெடுத்தாருன்னு கேக்குறிகளா? இருக்கிற ராஜ்யங்கள்லே வம்பு தும்பு இல்லாத மந்திரி சபை எம்மந்திரிசபை தானேன்னே! நானே இந்தத் திட்டத்தைத் தர்ரேன்னு மத்தவுங்க சந்தேகப்படுறதுக்கு வழியில்லேங்கிறேன்!"

............

"திட்டம் நினைத்தபடி வெற்றியைத் தர்லேங்கிறிகளா ? தலைவலி போயி இடுப்பு வலி வந்தமாதிரிதான்! நாம ஒன்னு நெனைச்சா தெய்வம் ஒன்னு நினைக்கும்ங்கிறது சரியாப் போச்சுங்கிறேன். கோஷ்டிப் பூசலும்-பதவிச் சண்டையும் ஒழியிறதுக்கு திட்டம் கொண்டு வந்தா—அது புஸ்ன்னு வளந்து போச்சுங்கிறேன். இங்கே இம்மந்திரி சபையிலியே-பக்தவத்சலமா, கக்கனுங்கிற கோஷ்டி வளந்து போச்சுன்னு-வேறெ ராஜ்யத்திலே கேக்கனுமான்னே ?"

............

"முடிவு என்ன ஆகுமின்னு கேக்குறிகளா ? சேவை மனப்பான்மை—தொண்டுங்கிறதெல்லாம் காந்தியோட போச்சுங்கிறேன். இப்ப பதவிக்காகவே காங்கிரசிலே வந்து சேர்ருங்க. எல்லாரு மனசிலேயும் பதவிப் பித்து வளந்து போச்சு. இருக்கிற வரையிலும் அனுபவச்சிட்டு-முடிஞ்ச வரையிலும் அதிலே சம்பாதிச்சுக்கிட்டு போவோமின்னு நினைக்கிருங்க. அதனுலேதான் அந்த இடத்தை விட்டிட்டு வெளியே வர அவுகளுக்கு மனசில்லே! திட்டத்தைக் கேட்டிட்டு ஒப்புக்குப் பதவியைவிட்டவுகஎல்லாம்,ஏண்டா விட்டோமின்னு நினைக்கிருக. அவுகளுக்கு வேண்டிய ஆளாப் பாத்து உள்ளே நுழைக்கப் பாக்கிருக! அதுக்கு மேலிடம் சம்மதிக்கலேன்னு-காமராஜ் திட்டம் மோசமின்னு கத்துருகன்னே! அண்ணுதுரை சொன்னது மாதிரி தியாக உணர்ச்சி தன்னுலே வரனுமின்னேன்."

............

(12-ம் பக்கம் பார்க்க)



## கண்களைப்போன்றவர் கருணுநிதி !

உடலிலே உள்ள உறுப்புகள் எதையும் நின்று பற்றுகின்றவை.

உதாரணமாக, காது வருகின்ற ஒலியை நின்று கேட்ட பிறகுதான் உணரும். வாயும் அப்படித்தான். ஆனுல், கண் மட்டும் தொலைவில் உள்ள காட்சியை தானே உணரும். கண்ணைப்போன்று கருணுநிதி எதையும் அவ்வளவு சிறப்பாகச் செய்வார்.

கலைத்துறையிலே கருணுநிதி பெற்ற புகழ் கொஞ்சமல்ல. பராசக்திமூலம் அவர் அடைந்த புகழோடு மேலும் பல திரைப்படங்களாலும் புகழடைந்தார்.

கருணுநிதி அந்தப் புகழை நம்பி அந்தத் துறையிலேயே சென்றிருந்தால் பணத்தோடும் வாழலாம்; பகட்டோடும் வாழலாம். ஆனுல் அவர் கொண்ட இலட்சியத்தை மறந்து விடவில்லை.

சர்க்கஸ்காரன் உயரத்திலே விளையாடினுலும் பூமியில்தான் இறங்கவேண்டும். விளையாடும்பொழுதுகூட சர்க்கஸ்காரன் பூமியைப் பார்த்துக்கொண்டுதான் இருப்பான். பூமியைப் பார்க்காமல் மேலேயே பார்த்துச் செல்பவன் பபூன்தான்; அவன்தான் தடுமாறி விழுவான். அந்த ரகத்தைப் போன்றல்லாது எந்தப் புகழுக்கும் மயங்காது பணியாற்றுபவர் தம்பி கருணுநிதி.

தினகரன்

## குழப்பவாதிகளுக்கு ஒரு எச்சரிக்கை!

# விடுதலை உணர்ச்சியை எவராலும் தடுக்க முடியாது!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

துருவங்களாக மாறிய பிறகும் இந்திய ஒற்றுமை இருக்கிறதா? 1936-க்கு முன்பு ஒன்றாக இருந்த பர்மா இப்போது ஒன்றாக இருக்கிறதா? பாரத தேவியின் முண்டத்தை வைத்துக்கொண்டு இருக்கும் நிலை தெரியாதா? இந்தியா ஒரு நாடு என்றால் டெல்லியில் ஒரு பிரதமர் நேருமஹானும்-காஸ்மீரில் ஒரு பிரதமர் பக்சிகுலாம் முகமதும் இருப்பது காம்ரேடுகளின் அரசியல் பார்வையில் படவில்லைபோலும்.

"ஆங்கிலேயர்கள் தமது அரசியல் அமைப்பையும் முதலாளித்வப் பொருளாதாரத்தையும் இந்நாட்டில் புகுத்தினார்கள். அது இந்தியாவின் ஒருமைப்பாடு சம்பந்தமான கருத்தையும் ஒரு மெய்ப் பொருளாக ஆக்கி நிறைவு செய்தது." இவ்வாறு கூறியவர் பிரிவினைவாதியல்ல. முற்போக்குவாதி என்று கூறப்படுகிற "எஸ். ஏ. டாங்கே" எழுதியுள்ள 'பண்டைக்கால இந்தியர்' என்ற புத்தகத்தின் 44 வது பக்கத்தில் எழுதிக் காண்பித்துள்ளார்.

காம்ரேடு டாங்கே எழுதியதைக்கூட அவரைப் பின்பற்றும் பிண்டங்கள் உணரவில்லையென்றால், அறிஞர் அண்ணா கூறுவதை எங்கே சிந்திக்கப் போகிறார்கள். உப்பில்லாத பருக்கையைத் தின்னும் இவர்களிடம் உணர்ச்சியோ, உணர்வோ இருக்காதுதான்.

ஆங்கிலேயருக்கு முன்னர் இந்தியாவில் ஒருமைப்பாடோ-ஒற்றுமையோ-இணைப்போ இருந்ததில்லையென்பதை டாங்கே ஏற்றுக்கொள்கிறார், ஆனால் இங்கே இருக்கும் கருணையாற்றங்கரை கல்லெறித் தலைவர்களும்- கந்தசாமிகளும்- கல்யாணசுந்தரங்களும் ஏற்க மறுப்பது விந்தையிலும் விந்தை. வெள்ளையர்களின் ராஜதந்திரத்தாலும் ஆட்சியின் அதிகாரத்தாலுமே இந்த இணைப்பு ஏற்பட்டதே அல்லாமல்'இந்தியர்கள்' என்ற உணர்ச்சியால் ஏற்பட்ட ஒருமைப்பாடு அல்ல என்பதை உணர்வதுதான் புத்திசாலித்தனம். அதை விட்டுவிட்டு "நேசனல் இண்டகிரேசன்" பேசிக்கொண்டு அரசியலை பிழைப்பாகக் கொள்வது கடைந்தெடுத்த கயமைத்தனம்.

"இந்தியா ஒரு நாடு எனக் கருதிக் கொண்டிருக்கிறோம். ஆனால், புரட்சி விரைவில் மூண்டெழப்போகிறது. அப்போது, பற்பல தேசிய இனங்கள் உருக் கொள்ளப் போகின்றன." இவ்வாறு 1925-ம் ஆண்டில் நடைபெற்ற ஆசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பயிற்சி முகாமில் கலந்துகொண்டு பேசிய "ஸ்டாலின்" கூறியிருக்கிறார். ஸ்டாலின் கூற்றுப்படிப் பார்த்தால், வெள்ளையர்கள் இந்த மண்ணை விட்டுப் போவதற்கு முன்பே, தென்னகத்திலும் புரட்சி தோன்றி இருக்கவேண்டும். ஆனால், என்ன காரணத்தினாலோ ஏற்படவில்லை.

திராவிடத்தில் விடுதலை வேட்கையின் கரு உருவாகிவிட்டது. உருவாகியதின் எச்சரிக்கைதான் டெல்லியின் மூளையை குழப்ப ஆரம்பித்துள்ளது. செங்கோட்டையில் தென்னகத் தலைவன் அறிஞர் அண்ணா எழுப்பிய உரிமைக்குரல், டெல்லிப் பிரியர்களுக்கு அதிர்ச்சியையும்- அச்சத்தையும் கொடுத்துவிட்டதின் பயன்தான் சட்டத்தை திருத்துகிற திருப்பணியில் இறங்கி இருக்கிறார்கள்.

1914-ல் வெள்ளையன் வகுத்திட்ட மெக்மகான் கோட்டைத் தாண்டி, உரிமை கொண்டு சீனாக்காரனை எதிர்க்கத் தெரியாத செம்பிடாரிகள்தான் "கிடைக்காது தம்பி கிடைக்காது இன்பத் திராவிடம் கிடைக்காது" என்று அவலக் குரலில் ராகம்போட்டு ஒப்பாரி வைக்கின்ற கங்காணி கம்யூனிஸ்ட்டுகள், அன்று பிரிவினையை ஆதரித்து வந்தவர்கள்தான்.

1930-ல் பாக்கிஸ்தான் பிரிவினையை ஆதரித்துக் கை தட்டியகுணாளர்கள்தான் இவர்கள். 'பாக்கிஸ்தான் முஸ்லிம்களின் பிறப்புரிமை' என்று பீப்பிள்ஸ் வார்" என்ற பத்திரிகையில் ஜோஷி எழுதி வந்ததை எந்த மானமுள்ள காம்ரேடும் மறுக்க முடியுமா?

"நாம் இதுவரை பிரிவினைக் கொள்கைக்கு தெரியாத்தனமாக புகழ்மாலை சூட்டி வந்தோம். இந்திய ஒற்றுமைபற்றிக்கவலைப்படாமல் இருந்துவிட்டோம்." இவ்வாறு மதுரையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் காலஞ்சென்ற திரு. அஜாய்கோஷ் கூறியிருக்கிறார். ஆகவே, நீண்ட நெடுங்காலமாக பிரிவினையைத் தூண்டியும், ஆதரித்தும் வந்தவர்கள்தான் இந்த காம்ரேடுகள். ஆனால், இன்று திராவிட உரிமையை எதிர்க்கிறார்கள். இந்த வாலறுந்தவர்கள் எதிர்ப்பதால் பிறப்புரிமை மங்காது.

பிரிவினைக் கொள்கையை தி. மு. கழகம் தேர்தல் பிரச்சினையாக்கவில்லை. என்று ஓலமிடுகிறார்கள். இது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க எண்ணும் முட்டாளின் செயல் போல் இருக்கிறது.

"மந்திரி சுப்பிரமணியம் கூறிய யோசனையை மீறி, திராவிட நாட்டின் மீதுள்ள உறுதியை தி. மு. க. தேர்தல் அறிக்கையில் மீண்டும் நிலைநாட்டியுள்ளது."

இப்படி 19-12-61-ல் மெயில் பத்திரிகை எழுதியிருக்கிறது. அதோடு மட்டுமா? "இந்திய யூனியனிலிருந்து பிரிந்து தமிழகம், மைசூர், கேரளா, ஆந்திர மாநிலங்கள் இணைந்து வாழும் திராவிடநாட்டை அமைக்கும் கொள்கையில் தன் உறுதியை மீண்டும் தேர்தல் அறிக்கை மூலம் நிலைநாட்டிற்று தி. மு. க."

இப்படி 18-12-61-ல் வெளியான 'டைம்ஸ் ஆப் இண்டியா' என்ற ஏடு சுட்டிக் காட்டியுள்ளது. "வாக்களித்த அத்தனை பேரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரிவினைக் கொள்கையை ஆதரிப்பவர்கள் அல்ல என்று காங்கிரஸ்காரர்களும், தமிழரசுக் கழகத்தாரும், கம்யூனிஸ்ட் கட்சியினரும் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

முறையா இது?

தி. மு. க. கோருகின்ற நாட்டுப் பிரிவினை தீமை பயக்கக் கூடியது என்று மாற்றுக் கட்சியினர் மன்றாடினார்கள்.

தீங்கு பயப்பதாயிருந்தாலும் பரவாயில்லை, தங்களுக்கு அதுதான் வேண்டும் என்று முப்பத்தி நாலு லட்சம் பேர் தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

(10-ம் பக்கம் பார்க்க)



### தென்னகத் தலைவன் வாழ்க!

தென்னகத் தலைவன்! செஞ்சொல்
செப்பிடும் புலவன்! நெஞ்சத்
திண்ணியன்! தன்னைத் தூற்றித்
திரிபவர் தமையும் போற்றும்
கண்ணியன்! கருணை யாளன்!
காஞ்சியில் பிறந்த சீலன்!
எண்ணிலா இதய வானில்
எழுந்ததோர் உதய சூர்யன்!

பலநூ ருண்டு காலம்
பட்டோய்ந் திருந்த பின்னர்
இலகுவில் கிடைத்த நல்ல
இரத்தின மணியைப் போல
வளமிகு தென்ன கத்தில்
வாழுமோ ரினத்து மக்கள்
குலமது தழைக்க வந்த
குறைவிலா மதிசேர் செல்வம்!

அந்தநாள் தென்ன கத்தை
ஆண்டவர் அடிமை யாக
இந்தநாள் வடவ ருக்கு
இருப்பதோ வெட்கம்! வெட்கம்!!
எந்தையே! தாயே!! வீர
இளைஞரே!!! எழுவீர்!!!! என்று
சிந்தையைத் தூண்டும், அண்ணா
துரையெனும் அறிஞன் வாழ்க!

—பண்பாளன்.


(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமாயிருக்கிறது. ஒரு மூலையில் ஒரு துண்டைப் போடுகிருர். அவர் சற்று வெளியே போக நேர்ந்தால் என்ன செய்கிருர். "ஜலம் சாப்பிட்டுவிட்டு வருகிறேன், சற்று இடத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று பக்கத்திலுள்ள பிரயாணியிடம் சொல்லிவிட்டுப் போகிருர். மற்றவர்களுக்கு இடம் கொடுக்காமல் தாம் சௌக்கியமாகப் பிரயாணம் செய்யவேண்டும் என்றுதான் பெரும்பாலான பிரயாணிகள் நினைக்கிருர்கள். ஆகையால், தன்னுடைய இடத்தையும், மற்றவருடைய இடத்தையும் பிறருக்கு விடாமல் காப்பாற்றிக் கொள்வதில் அவருக்கு அக்கறை இருக்கிறது. ராஜிநாமா செய்யும் முதல் மந்திரிகளும் இப்படித்தான் செய்கிருர்கள். "நான் இப்போது "தியாகம்" செய்துவிட்டு "சேவைக்கு" போகிறேன். நான் திரும்பி வரும்வரையில் இடத்தை ஜாக்கிரதையாக வைத்துக்கொள்" என்று சொல்லுவதுபோல், தன்னுடைய கோஷ்டியைச் சேர்ந்த ஒருவரை அப்பதவியில் அமர்த்த விரும்புகிருர். காமராஜ்திட்டத்திஞல் காங்கிரஸில் கோஷ்டிப் பூசல்கள் ஒழியவில்லை. அதற்கு மாருக இந்த கோஷ்டிகள் மேலும் உறுதிப்பட்டு, பலப்பரீட்சைக்கும் தயாராயிருக்கின்றன.

இதைப்பற்றி ஸ்ரீ நேரு என்ன நினைக்கிருரென்பதுதான் முக்கியம் என்று முதலில் குறிப்பிட்டோம். இதே ரீதியில்தான் அவருடைய சிந்தனையும் போய்க்கொண்டிருக்கிறது. ஸ்ரீ ஜகஜ்ஜீவன்ராமுக்கு அளிக்கப்பட்ட ஒரு வரவேற்பில் ஸ்ரீ நேரு பேசுகையில் ராஜ்யங்களிலுள்ள போட்டாபோட்டியைப் பற்றி வேதனை தெரிவித்திருக்கிருர். "சில ராஜ்யங்களின் தலைமைப் பதவிக்கான போட்டி பெருமளவில் நடைபெறப் போவதாக அறிந்து நான் மிகவும் கவலைப்படுகிறேன். இது காமராஜ் திட்டத்தின் உண்மையான உணர்ச்சியைப் பிரதிபலிக்கவில்லை. இந்த ராஜ்யங்களில் நடைபெறுவது முற்றிலும்எதிர்பாராத ஒன்ருகும்...முதல் மந்திரிகள் பதவியைத் துறந்துவிட்டு, கட்சி வேலைக்குப் போக வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. பிரசாரமோ, நிர்ப்பந்தங்களோ இல்லாமல் புதிய தலைவர்கள் ஏகமனதாகத் தேர்தெடுக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது" என்று ஸ்ரீ நேரு அந்த வரவேற்பில் பேசியிருக்கிருர். எதிர்பார்த்தபடி திட்டம் நடைபெறவில்லை என்று ஸ்ரீ நேரு வேதனைப்படுகிருர்.

தியாகம் என்பது கட்டாயத்திற்காகவோ, ஆடம்பரத்திற்காகவோ செய்யப்படும் ஒன்றல்ல. சுதந்திரப் போராட்ட காலத்தில்தான் உண்மையான தியாகத்தைப் பார்த்தோம். மாணவர்களும்,பெரியகுடும்பப் பொறுப்பு உள்ளவர்களும் வேலைகளில் இருந்தவர்களும், விளைவுகளைப் பொருட்படுத்தாமல் சுதந்திரப் போராட்டத்தில் குதித்ததுதான் உண்மையான தியாகம். அவர்களை யாரும் நிர்ப்பந்தம் செய்யவில்லை. மனச்சாட்சியும், உள்ளுணர்ச்சிகளுமே அவர்களுக்குத் தூண்டுதல்களாயிருந்தன. இன்று பதவிகளை "தியாகம்" செய்பவர்களுக்கும், அவர்களுடைய ஆதரவாளர்களுக்கும் உண்மையிலேயே அந்த உணர்ச்சி இருக்கிறதா என்பதற்கு அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். காமராஜ் திட்டம் நல்ல நோக்கத்துடன் தயாரிக்கப்பட்டு இருக்கலாம். ஆனல், அவ்வளவு தியாக உணர்ச்சி இன்று காங்கிரஸ் ஸ்தாபனத்திலுள்ளவர்களிடம் இல்லை. அப்படியானல் என்னதான் வழி? இதற்கு நாம் பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஒருவரைப் பார்க்கும்போது. "ஏதோ மாதிரி இருக்கிறீர்களே, உடம்பு சரியாய் இல்லையா?" என்று நாம் கேட்கிறோம். அதற்காக அவருக்கு நாம் மருந்து கொடுக்க வேண்டுமென்று யாரும் எதிர் பார்ப்பதில்லை. நோயுற்றவர்தான் அதற்கு சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். தம் நோயைத்தைரியமாகச்சொல்ல வெட்கப்படுபவர்கள் அதன் பலனை அனுபவிக்கத்தான் வேண்டும்.

—**தினமணி.**




### திருடனைத் தேடவேண்டாம்! உமது பாக்கெட்டிலேயே இருக்கிருன் பண்டிதரே!

பஞ்சாப் முதலமைச்சர் கெய்ரான்மீது ஊழல்-அதிகார துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுகளை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொண்டு வந்தார்கள். கெய்ரான் உத்தமர் என்று நேரு வாதாடினர். பஞ்சாபிலுள்ள திரைப்படக் கொட்டகைகளில் பெரும் பகுதி கெய்ரான் குமாரர்களுக்குச் சொந்தமாம். மற்றவர்களுக்கு மறுத்து அவர்களுக்கே லைசன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறதாம். மருத்துவமனையில் தன் உறவினர்களுக்குத் தனிச் சலுகை காட்டும்படி சர்ஜனை வற்புறுத்திஞராம் கெய்ரான். அவர் மறுக்கவே சர்ஜன்மீது வீண் பழி சுமத்தி அவரைப் பதவியைவிட்டு விலக்க முயற்சித்தார். சர்ஜன் நீதிமன்றத்திற்குச் சென்ருர். சுப்ரீம் கோர்ட் கெய்ரானின் செய்கையைக் கடுமையாகக் கண்டித்து சர்ஜனுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பைக்கூட அலட்சியம் செய்து-கெய்ரான் தவறே செய்யாத தங்கக் கம்பி-ஊழல் இருக்குமானல் விசாரிப்போம் என்று வாதாடினர், பண்டித நேரு.

ஊழல் எங்கேயும் இல்லை! அதைத் தேடி அலைய வேண்டாம்-அது உமது பாக்கெட்டிலேயே இருக்கிறது-என்னும் கருத்தைத்தான் மேற்கண்டவாறு கேலிச் சித்திரமாக வெளியிட்டிருக்கிறது. 'தமிழ்நாடு' நாளிதழ்.

—நன்றி 'தமிழ்நாடு' நாளிதழுக்கு.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி 29-மார்ச் 62-ல் வெளியான "குமுதம்" பத்திரிகை எழுதியிருக்கிறது. இதைப்போன்று பலப் பல பத்திரிகைகள் கருத்து வெளியாக்கியது. அவைகளையெல்லாம் இந்த அரை டிக்கட்டுகள் அறியாமல் உளறுகிருர்கள் ஏன்? கம்யூனிஸ்ட் கட்சியின் நாள் ஏடான 'ஜனசக்தி' பத்திரிகை எழுதியதைக் கூடவா மறந்தார்கள்.

"தி. மு. கழகத் தேர்தல் அறிக்கையின் துவக்கத்தில் தி. மு. க.வின் இறுதி லட்சியமான திராவிடநாடு பிரிவினை வலியுறுத்தப் பட்டிருக்கிறது."

இவ்விதம் 21-12-61-ல் "ஜனசக்தி" இதழில் வெளியிட்ட காம்ரேடுகள் முன்னுக்குப் பின் முரணைப் பேசிவருகிருர்கள்.

1946-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு மெமோரண்டம் வெளியிட்டது. அதில் இந்தியாவை மூன்று கூறுகளாகப் பிரித்து விடுவது என்ற கருத்துப்பட வெளியாக்கியது. 'பஞ்சாப், சிந்து, பெலுசிஸ்தான், பட்டான்ஸ்' ஆகியவைகளை முதல் யூனிட்டாகவும், இந்தி பேசும் பகுதியை 'இந்துஸ்தான்' என்ற முறையில் இரண்டாவது யூனிட்டாகவும், 'தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம், மராட்டியம், குஜராத், பீகார், அசாம், ஒரிஸா, வங்காளம்' ஆகிய பகுதிகளை உள்ளடக்கி மூன்ருவது யூனிட்டாகவும் பிரிப்பதென்று 46-ல் கூறிய குணக்கேடர்கள்தான். தி. மு. க. கோரும் கோரிக்கையை நகைக்கிருர்கள்.

உயிரைக்கொடுத்தேனும் பிரிவினையைத் தடுப்போம் என்று மார் தட்டுகிற மண்டுகங்கள் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். வங்கத்தைச் சேர்ந்த 'பெருபாரி' பிரா்ந்தியத்தை பாக்கிஸ்தானுடன் இணைத்தபோது இந்த மானங்கெட்டவர்கள் எங்கே போயிருந்தார்கள். 20 ஆயிரம் சதுர மைலை சீனக்காரன் பிடித்திருக்கிருனே என்ன செய்தார்கள். வகைகெட்டவர்கள் உயிரைக் கொடுப்பார்களாம். இல்லாத ஒற்றுமை பேசி ஒட்டுப்போட நினைத்தால் அது நடக்காது. பட்ட மரம் துளிர்ப்பதில்லை. அதைப்போல்இந்திய ஒற்றுமையும் உருப்படப்போவதில்லை.

"தமிழ்நாட்டில் கம்யூனிஸ்டுகளுக்கான வெற்றி வாய்ப்புகள் மறைந்துவிட்டன. ஏனெனில், அண்ணதுரை மகத்தான திராவிடத் தலைவராகி விட்டார்."

இவ்வாறு "அசோசியேடட் பிரஸ்" நிறுவனத்தின் ஆசிய நிருபராக புது டில்லியில் பணியாற்றிய "செலிஸ் ஹாரிசன்" என்பவர் எழுதியுள்ள "இந்தியா தி மோஸ்ட் டேஞ்சரஸ் டெக்கா்யிட்ஸ்" என்ற நூலில் தெளிவாகக் கூறி இருக்கிருர். இந்நூலை "ஆக்ஸ்போர்டு-யுனிவர்சிட்டி" பிரஸ் வெளியிட்டுள்ளது. இப்பிரஸ் வெளியிட்டதிலிருந்து இந்நூலின் தரத்தையும்-தகுதியையும் புரிந்து கொள்ள முடியும். செலிஸ் ஹாரிசன் எழுதியபடி கம்யூனிஸ்டுகளை கல்லறையில் தேடிப்பார்க்கும் பரிதாப நிலைக்கு வந்துவிட்டது.

வடபுலத்திலிருந்து விடுதலை பெறும்வரை மக்களுக்கு வாழ்வு இல்லை. வளம் இல்லை. என்பதை நாட்டவர் உணர்ந்துவிட்டனர். உணர்ச்சியின் உத்வேகம்தான் எங்கள் தானைத் தலைவர் அறிஞர் அண்ணவை செங்கோட்டை அனுப்பியுள்ளது என்பதை மறவாதீர்கள். வெல்க திராவிடம்.

**—முத்துப்பேட்டை-**
**எஸ், ஜே. ஆப்தீன்.**

(4-ம் பக்கத் தொடர்ச்சி)



"புதுசா யாரோ வந்திருங்காங்களே!' கேட்டுக்கொண்டே திருவேங்கடம் உள்ளே வந்தான்.

"அக்காவுக்கு வேண்டியவங்க" இந்திராணி நிலைவாசலருகே நின்ருள். மாடத்தில் விளக்கு எரிந்தது. திரும்பவும் அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். பின்னலைமுன்புறம்போட்டுக்கொண்டு ஒய்யாரமாக நின்ருள். அது என்ன அழகோ? என்ன பார்வையோ? என்ன சிங்காரிப்போ?

புதுப் பெண்ணைப் பார்ப்பது போல திருவேங்கடம் அவளையே பார்த்தான். கன்னமும், விழிகளும் குறுகுறுத்தன. வாய் சிவக்க வெற்றிலை வேறு போட்டிருந்தாள். சாயலும், நிலையும் புன்சிரிப்பும் 'எப்படி இருக்கிறது?' என்று கேட்பதுபோலிருந்தன.

திருவேங்கடத்திற்கு என்ன பேசுவது என்றுதான் தெரியவில்லை. இருந்தாற்போலநினைவு வந்தது.

"உள்ளே பணம் இருந்ததே ஏது?"

அவள் முகத்தில் ஒரு கணம் இருள் தட்டிற்று.

"அக்கா கொடுத்தாங்க"

எதையாவது சொல்லவேண்டுமே! அவன் அமைதியானுன்.

ஃ ஃ ஃ

மழை விட்டிருந்தது. தொலைவில் பெரிய ரோட்டில் கார்களின் சத்தமும், சைக்கிளின் மணியோசையும் இரைந்தன. படுத்திருந்த திருவேங்கடம் ஏதோ அரவம் கேட்டு எழுந்தான். பாத்திரக்கடை பட்டறையில் வழக்கம்போலசிற்றுளியால் எவனே ஒருவன் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டிருந்தான். எல்லாஓசைகளும்அந்த அடியிலே போய் ஒடுங்கி விட்டதாக அவனுக்குத் தோன்றியது. சில நேரங்களில் பட்டறையருகே நின்று அதையே பார்த்துக்கொண்டிருப்பது திருவேங்கடத்துக்கு வேடிக்கையாக இருக்கும். மெருகு ஏருத செப்புப் பாத்திரத்தில் ஒவ்வொரு முறை அடி விழும்போதும் பாத்திரத்தில் ஒவ்வொரு பொட்டுகளாகப் பிறந்துகொண்டிருக்கும்.

திடீரென்று அடிப்பது நின்றதும்தான் அவன்நிதானத்திற்கு வந்தான். முற்றத்திலிருந்த வாளித் தண்ணீரை தாழ்வாரத்தில் வைத்துவிட்டுக் கதவை சாத்திக்கொண்டிருந்தாள் இந்திராணி.

எண்ணெய்விளக்கின்மங்கிய ஒளியில் முதுகில் பின்னலை அலையாகப் பிரித்த கூந்தலும், முழங்கையின் மென்மையும், சதைப் பிடிப்பான கன்னங்களும் அவனுக்கு மயக்கம் போலத் தெரிந்தன.

அயர்ச்சி அழுத்திய கண்களை திருவேங்கடம் கசக்கிக் கொண்டான்.

அவள் உள்ளே போனுள்.

படுக்கையைத் தட்டிப் போட்டுவிட்டு அரிக்கன் விளக்கின் திரியை தாழ்த்திக்கொண்டிருந்த இந்திராணி மீது நிழல் கவிந்தது. அவள் திரும்பிப் பார்த்தபோது அசட்டுச் சிரிப்போடு திருவேங்கடம் அங்கே நின்ருன். தலையில் வைத்திருந்த பூச்சரத்தை எடுத்து அவள் அமைதியாக தலையணையருகே வைத்தாள்.

ஃ ஃ ஃ

நன்ருக விடிந்த பிறகு எழுந்திருந்ததிருவேங்கடம்வெளியே கட்டிலில் வந்து உட்கார்ந்து வழக்கம்போல பீடியைப் பற்ற வைத்தான். உடலையும் உள்ளத்தையும் இதமானஏதோவொரு உணர்ச்சி வருடிற்று. புகையை மெதுவாக ஊதியபடி தூக்கத்தின் அழுத்தம் விலகாத இமைகளை மெல்ல அடைத்தபோது அந்த மயக்கம் தரும் சுகமும் சொகுசும்...

முற்றத்திலிருந்து விலகிய வீதியின் தொலைவில், பளபளவென்று தேய்த்துக் கழுவிய தண்ணீர் குடத்தோடு இந்திராணி வருவது தெரிந்தது. குளித்துவிட்டு கோதி முடிக்காத கூந்தலை இழைய இழைய நழுவ விட்டிருந்தாள். இரவு எடுத்து வைத்த பூச்சரம் புதுமை குலையாமலிருந்தது. எல்லாவற்றிற்கும்மேலாகஉடம்போடு ஒட்டிக்கிடந்த அந்த பட்டு ரவிக்கையும் அதிலே பறக்கும் பட்டாம்பூச்சிகளும்...

திருவேங்கடம் கண்களை திரும்பவும் மூடிக்கொண்டான்.

நடுமுற்றம் வரைக்கும்வெயில் விழுந்திருந்தது. மிட்டாய் வண்டியின் பலநிறக் கண்ணுடிகள் ஒளியில் பளபளத்தன. திருவேங்கடம் மூன்ருவதாக ஒரு பீடியைப் பற்ற வைத்தான் தொலைவில் பட்டறையில் எதையோ போட்டு ஓங்கி அடிப்பது கேட்டது...

அன்று திருவேங்கடம் வியாபாரத்திற்குப் போகவில்லை.

---

திருப்பத்தூர் தொகுதி

எங்கள்

தொகுதி உறுப்பினர்

## ஆரூர் இரா. முத்து

### எம். பி.

விரிந்து-நிறைந்த- இந்தியத் துணைக் கண்டத்தின்- ஒளி நிரம்பிய-ஜீவநாடியாகத் திகழ்வது தான்- டெல்லிப் பாராளுமன்றம். அங்கு நிறைவேற்றப்படும் - சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடக்க வேண்டிய- தலைவிதிக்கு நம்மை ஆளாக்குகின்ற உறுப்பினர்களில்- அரூர் இரா. முத்து எம்.பி. அவர்களும் ஒருவர். கல்லூரிப் புகுமுக வகுப்பு வரை படித்தவர். பண்பாளர்; மாற்றுக் கொள்கை உடையோரும்- தேர்தலில் இவருக்கு விரும்பி- வாக்களித்த பெருமை உடையவர்! அத்தகைய சிறப்பாளர்; சர்வ சதாநேரமும்- தொகுதி- தொகுதி-என வண்டாகச் சுற்றுபவர்! நேர்மையை யாரானுலும் எடுத்துச் சொல்ல தயங்கமாட்டார்.

இந்தியாவிலேயே- குறிப்பிடத்தக்க மாபெரும் வெற்றி- தேர்தலில்- தி.மு.கழகத்திற்கு- வாங்கித்தந்த தொகுதி எங்கள் திருப்பத்தூர் பாராளுமன்றத் தொகுதி! ஐந்து சட்டமன்ற உறுப்பினர் களையும்- ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் ஒருமுகமாக-எதிர்கட்சி வெற்றி வாகை சூடிய பெருமைக்குரிய தொகுதி இது! காங்கிரசின் பரம்பரைச் சொத்தாகக் கருதப்பட்ட இத்தொகுதி- ஆளும் கட்சிக்கு-ஒரு பேரிடியாக- வாய்த்தது! உண்ணுமல் உறங்காமல்- கழகம் வெற்றிபெற- உழைத்த- தூய தொண்டர்களை- எண்ணி-எண்ணி பெருமிதம் கொள்வார்!

தொகுதியில் எங்கு கூட்டம், திருமணம் நடந்தாலும்- அவரைக் கேட்காமலே-பெயரைப் போட்டு விட்டு-அஞ்சல் அனுப்பி விட்டால்- நேரம் தவருமல்- நிகழ்ச்சியில் பங்கேற்கும்-நல்லவர்- பேச்சிலும் வல்லவர்! கழகம் வளரவேண்டும் என்ற ஒரே எண்ணம் கொண்டு இயக்கத் தொண்டு புரியும் உழைப்பாளர்! மாவட்ட வட்டார வளர்ச்சிக் கூட்டங்களில் கலந்து - விவசாய வளர்ச்சிக்காகவும் - கிராம முன்னேற்றங்களுக்கும்- நல்ல திட்டங்களை வழங்குவார்! செயலாற்ற ஆவன புரிவார்!

தமிழக-தபால்-தந்தி ஆலோசனைக் குழுவிலும் - தமிழக உழவர் மன்றக் கவுன்சிலிலும்- உறுப்பினராகத் தற்போது பொறுப்பேற்றுள்ளார். தமிழக உழவர் மன்றச் சார்பில்-இந்தியா பூராவிலும் சுற்றுப் பயணம்மேற்கொண்டு-உழவர்நிலை தொழில் வளம் - ஆகியவை குறித்து தெரிந்து-தென்னகத்தின் தாழ்ந்துள்ள நிலைமையினை - மக்களுக்கு எடுத்துச் சொல்லி - கழக வளர்ச்யினை பெறுக்குகிருர்! வாய்ப்புக் கிடைத்த போது - பாராளுமன்றத்தில் பேசுகின்ற இவர்- தி.மு.கழக-கட்சிக் கொறடாவாகவும் பணிபுரிகிருர். பாராளுமன்ற உறுப்பினரென்ருல் யார் என்று இதுவரை தெரியாமல் இருந்து வந்த-இந்தத் தொகுதி தங்கள் உறுப்பினரை அடிக்கடிச் சந்திக்கின்ற மிக நல்ல வாய்ப்பை தி.மு. கழகத்தால் பெற்றுள்ளது!

கோட்டப்பட்டி,
**ந. தனபால்.**


அண்ணுவின் அடிச்சுவட்டில் நடைபயிலும்-
அது சொல்லும் செய்திகளில் தமிழ் இனிக்கும்!

நவம்பர் முதல் நாள் எங்கும் கிடைக்கும்

# திருவிளக்கு

(வார ஏடு)

ஆசிரியர் :
க. இராசாராம்
பி.ஏ., எம்.பி.

முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் எங்கும் தேவை.

விபரங்களுக்கு:
2[142, மவுண்ட் ரோடு, சென்னை-6.

# ?... பதில்!

## வணங்காமுடி பதில் தருகிறார்

கே: 'தினமணி' போன்ற பத்திரிகைகளைப் படித்தால் உலக விஷயங்களை அறிந்து கொள்ளலாம் கட்சிப் பத்திரிகைகளைப் படித்தால் என்ன அறியமுடிகிறது என்கிறார் என் பள்ளி பத்தாம் வகுப்பு நண்பர் ஒருவர் அவருக்கு நான் என்ன பதில் சொல்லுவது?

—செ. அசுமல்லா,
பாளையங்கோட்டை.

ப: சோறு சாப்பிட்டாலாவது உடல் வளரும்! மருந்து குடித்து என்ன பயன்? நெல் மணிகளை விதைத்தாலாவது பயிர் வளரும்! உரம்போட்டு என்ன பயன்? வீட்டுக்கு வண்ணம் பூசினாலாவது அழகு மிளிரும்! விளக்குப் போட்டு என்ன பயன்? இந்தக் கேள்வியைப் போன்றதுதான் தினமணி படித்தால் உலக விஷயம் தெரிந்து கொள்ளலாம்-எதிர்க் கட்சிப் பத்திரிகையைப் படித்தால் என்ன தெரிந்துகொள்ள முடியும் என்பது! உயிர்வாழ்வதற்கு உணவு எவ்வளவு அவசியமோ-அத்தனை அவசியம் நோய் தீருவதற்கு மருந்து. பயிர் செழிப்பாக வளருவதற்கு உரம் மெத்த அவசியம். வண்ணம் ஜொலிப்பதற்கு விளக்கு பேருதவியாக இருக்கும். இதைப் போன்றுதான் உள்நாட்டு அரசியலில் உள்ள குறைபாடுகளை-ஊழல்களை தெளிவாகத் தெரிந்துகொள்ள எதிர்க்கட்சி ஏடு கண்ணாடி போன்று பயன்படும்! தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம்தானா என்றால்-அவசியம்தான்! நாம் செலுத்துகின்ற வரிப்பணம்-விரயமாகாமல் செலவு செய்யப்படுகிறதா? என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது நம்முடைய கடமை! நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சுயநலமின்றி பணியாற்றுகிறார்களா? நாட்டுக்கு-மொழிக்கு ஊறு தேடாவண்ணம் சேவை செய்கின்றார்களா? அவர்கள் நிர்வாகத்தில் ஊழல் பெருகியிருக்கிறதா? அதை அவர்கள் மூடிபோட்டு மறைத்து வைத்திருக்கிறார்களா? என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டியது இந்த நாட்டு ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். இவைகளையெல்லாம் தெரிந்து கொள்ள உதவுவது எதிர்க்கட்சி ஏடு ஒன்றுதான்! விஞ்ஞான ரகசியங்களைத் தெரிந்து கொள்ள ஆங்கில மொழி போதும்-ஆனால் பெற்ற தாயோடும்-கட்டிய மனைவியோடும்-பெற்ற குழந்தையோடும் பேசி இன்புறுவதற்கு தாய்மொழி அவசியம் தேவை. தாய்மொழிபோன்று-நம்மை நாமேதெரிந்து-புரிந்துகொண்டு வாழ்வதற்கு எதிர்க்கட்சி ஏடு தெளிவான கண்ணாடியாகும். தினமணி போன்ற ஏடுகளே போதும்-எதிர்க்கட்சி ஏடுகளைப் படிக்கத் தேவையில்லை என்று கருதுகின்றவர்கள்-குறுகிய மனம் படைத்தவர்கள் மட்டுமல்ல அவர்கள் குளத்திலே வாழுகின்ற தவளைகளுக்குச் சமம்.

கே: சீனஆக்கிரமிப்பு நடந்துகொண்டிருக்கும் நேரத்தில் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கம்யூனிஸ்டுகளை தமிழ்நாட்டு அரசாங்கம் விடுதலை செய்ததே அதன் உள் நோக்கம் என்ன?

—பி. எம். என். சன்ராசு
பகத்தூர்.

ப: காமராஜ் ஆட்சி-ராமராஜ்ய ஆட்சியைவிட சிறந்தது என்று-திருவண்ணாமலைத் தெருக்களிலும் - நாங்குனேரித் தொகுதியிலும் கம்யூனிஸ்டுகள் பஜனை பாடி வந்தார்கள் அல்லவா-அந்தத் தரகு வேலைக்குப் பரிசு தரும் வகையில்தான் சிறைக் கதவுகளைத் திறந்துவிட்டிருக்கிறார் காமராஜர்.

கே: 1967-க்குப் பிறகு தி. மு. க. ஆட்சிக்கு வந்துவிட்டால் காமராஜர் என்ன செய்வார்?

—ப. பொன்னுசாமி
சிறுமுகை.

ப: ஜனங்களுக்குப் புத்தியில்லையென்று "பெரியார் பாணி"யில் பேசுவார். தமிழக சட்டசபையில் எதிர்க்கட்சி வரிசையில் வயிற்றெரிச்சலோடு அமர்ந்திருப்பார். அப்பொழுது "ஆகட்டும் பார்க்கலாம்" என்ற ஒரே பல்லவி மட்டும் போதாது, ஆகையால் இப்பொழுதே அவர் வாதத் திறமையோடு பேசக் கற்றுக் கொள்ள வேண்டும்.

கே: இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழ் ஆசிரியர்கள் கலந்து கொண்டால் சர்க்கார் தடை விதிக்குமா?

—அசுமல்லா
பாளையங்கோட்டை.

ப: தமிழ் ஆசிரியர்கள் கலந்து கொள்ளுகிறார்களா என்று ஒற்றர்களை வைத்து உளவு பார்க்கும். போராட்டத்தில் யாரும் ஈடுபடக்கூடாது என்று எச்சரிக்கை செய்யும்-உத்தரவு போடும். மீறிக்கலந்து கொண்டால் அவர்களைப் பழி வாங்கும்! கையாலாகாத இந்த அடிமை அமைச்சர்களுக்கு அதைத் தவிர வேறென்ன முடியும்?

கே: ம. பொ. சிவஞானம் ஆங்கிலத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறாரே? இந்தியின் காலைப் பிடிக்கவா-இல்லை சுய விளம்பரத்திற்காகவா?

—ஆர். இந்திரன்
கும்பகோணம்.

ப: சிவஞானம் அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது. அதனால் அவரைப் பலர் மதிக்கவில்லையாம். அந்த அவமானமே அவரை ஆங்கில எதிர்ப்புப் போர் துவங்கச் செய்திருக்கிறது. தானும் ஒரு தமிழனென்று சத்தம் போட்டுச் சொல்லும் அவர் இந்தி ஆதிக்கத்தைக் கைதட்டி வரவேற்கிறார்.

கே: இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெற்றி பெற்றால் 1967-ல் தி. மு. க. ஆட்சியைக் கைப்பற்றும் என்ற அச்சம் சில காங்கிரஸ்காரர்களிடையே ஏற்பட்டிருக்கிறதே-போராட்டத்தை என்ன செய்யப் போகிறீர்கள்?

—என். இராசு
திருவாரூர்.

ப: எதிர்ப் போராட்டம் என்ற பெயரில் காலித்தனத்தைத் தூண்டிவிடத்தானே காமராஜர் பதவியை விட்டு விலகியிருக்கிறார். காமராஜர் எத்தனை அவதாரங்கள் எடுத்தாலும் சரி-இந்தி எதிர்ப்புப் போரில் தி. மு. கழகம் வெற்றி பெறப்போவது உறுதி. 1967ல்-ஆட்சியைக் கைப்பற்றப் போவதும் மாற்றமுடியாத உண்மை!

கே: பண்டித நேருவால் பாராட்டப்பெற்ற காமராஜரின் புதிய திட்டம் எப்படி இருக்கிறது?

—ஆறுமுகம்
கொரடாச்சேரி.

ப: கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதுபோல்-காமராசரின் திட்டத்தால் குழப்பமும் குத்துவெட்டும் காங்கிரஸ் கூடாரத்திற்குள் 'பரிணமை' வளர்ச்சி பெற்று வருகிறதாம். கட்டாயச் சேமிப்புத் திட்டத்தைக் கைவிட்டதுபோல்-இன்னும் கொஞ்ச நாளில் காமராஜரின் திட்டமும் கைவிடப் படலாம்! அது நடந்துதான் தீரும்!

கே: பேரன் பிறந்தவுடன் தான் அண்ணாதுரை போராட்டம் நடத்துவார் என்று அனந்தநாயகி கிண்டல் செய்திருக்கிறாரே இதற்கு உங்கள் பதில் என்ன?

—குமரன்.
சின்னாளப்பட்டி.

ப: பிள்ளை பெறுகிற கவனத்திலேயும் - உணர்ச்சியிலேயும்தான் அம்மையார் இருக்கிறார்! அதனாலேதான் போராட்டத்தைப் பற்றிப் பேசுகிற பொழுதுகூட 'அந்த' எண்ணத்திலேயே பேசுகிறார்.

கே: இலங்கையில் வாழும் தமிழர்கள் சிரிமாவோ அரசினரால் தொல்லைக்கு ஆளாக்கப்படுகிறார்களே-அதற்கு முடிவே கிடையாதா? அவர்கள் எதிர்காலம் என்ன?

—தியாகராசன்
ஆற்காடு.

ப: சிரிமாவோ அரசின் அக்கிரமச் செயல்களை எதிர்த்து இலங்கைத் தமிழர்கள் நடத்தும் போராட்டத்தில் அவர்கள் வெற்றிபெறுவார்கள் என்றே நம்புகிறோம். இந்தியத் துணைக் கண்ட அரசினரின் ஆதரவு அவர்களுக்குக் கிடைக்குமானால் அவர்கள் இரத்தம் சிந்தாமலே வெற்றிபெற முடியும்.


**இளம் கவிஞர்களுக்கு இனிக்கும் செய்தி!**

எப்பொழுது, எப்பொழுது என்று கேட்டுக்கொண்டே இருந்தீர்கள்—இதோ தொடங்கிவிட்டோம்.

## வெண்பாப் போட்டி

**ஈற்றடி: "அண்ணா வழியே வழி"**

வெண்பா எழுதி அனுப்புங்கள். தகுதியுடைய வெண்பாக்கள் "தென்னகத் தலை"வனில் இடம் பெறும். மிகச் சிறந்த வெண்பாவிற்குப் பரிசாக மூன்று திங்களுக்கு "தென்னகத் தலைவன்" இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :—

**ஆசிரியர்: தென்னகத் தலைவன், சென்னை-6.**

Regd No: M 7640 தலைவன் விலை 16 காசு

# திரை அரங்கம்

அடுத்த இதழில்...

## கண்ணதாசனும் - கம்யூனிஸ்ட் கட்சியும்!

'இரத்த திலகத்'தில் அண்ணாவைக் காட்டியது தவறா? கம்யூனிஸ்ட் முண்டங்களுக்குச் சவுக்கடி. படிக்கத் தவறாதீர்கள்!

பார்த்த படம்

### நேஷனல் மூவீஸ்

## இரத்த திலகம்

கம்யூனிஸ்ட் சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து-மக்களுக்கு எழுச்சியும்-உணர்ச்சியும் ஊட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலில் தனி நிறுவனத்தினரால் தைரியமாகத் தயாரிக்கப் பட்டிருக்கும் படம் **இரத்ததிலகம்.**

இதில் அவர்கள் முழுமை பெற்றிருக்கிறார்களா - என்பதல்ல பிரச்சினை! முந்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற அளவில் அவர்கள் பாராட்டுக் உரியவர்கள்.

கதை சாதாரணமானது தான். அதுவும் துவக்கத்திலிருந்து பாதிவரைவிளையாட்டு-வாய்ச்சண்டை - ஆட்டம் பாட்டு-காதல்! இடைவேளைக்குப் பின் இலட்சிய நோக்குடன் படம் விரைகிறது.

எதிரியின் துப்பாக்கிக் குண்டுகள் உடலைச் சல்லடையாகத் துளைத்த போதிலும் எல்லையைக் காக்க கொடி பிடித்துக் கொண்டு முன்னேறும் காட்சியிலும் - எதிரிக்கு உளவு சொன்ன துரோகியைக் கொன்று போட்டு ஓடிவந்து அவன் தாயிடத்திலேயே அடைக்கலம் புகுந்து, உண்மை தெரிந்த பிறகு உருகும் கட்டத்திலும் சிவாஜி கணேசன் சிறப்பாக நடித்துள்ளார்.

ஆங்கில நடனம் ஒன்றைத் தவிர மற்ற காட்சிகளில் சபாஷ் பெறுகிறார் சாவித்திரி.

புஷ்பலதா விரயம்!

நாகேஷ்-மனோரமா நகைச் சுவை பழைய பாணி! போகாதே போகாதே என் கணவா-என்ற பாடல் மட்டும் கொட்டகையில் கலகலக்கும் சிரிப்பொலியை உண்டு பண்ணுகிறது.

வசனம் சிறப்பாக அமைந்திருந்தாலும் புயல்வீசி-பொறிப்பறக்க வேண்டிய கட்டங்களில் தென்றல் நடை போட்டுத் துவளுகிறதே!

"கோப்பையிலே என் குடியிருப்பு" "புத்தன் வந்த திசையிலே போர்"-ஆகிய பாடல்கள் இனிமையாக மட்டுமல்ல-கருத்துச் செறிவோடும் அமைந்திருக்கின்றன.

சீனாக்காரனை நல்ல தமிழ் பேச வைத்து-ஒத்தல்லோவை ஆங்கிலம் பேசச் செய்ததின் மூலம் அந்த நாடகம் அநாவசியம் என்ற கெட்ட பெயரைத் தேடிக் கொண்டார்கள்.

டைரக்ஷன்: ஆரம்பத்தில் இவர் விரு விருப்பை தந்திருக்கக் கூடாதோ?

மொத்தத்தில்—

உயர்ந்த நோக்கத்தோடு தயாரிக்கப்பட்ட பார்க்கக் கூடிய படம் இரத்தத் திலகம்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஆமாண்ணே! தியாகம் செய்யறதுக்கு தி. மு. க.விலே வாலிபர்கள் நிறைய இருக்கான்னே! இப்போ காங்கிரஸ் கட்சியிலே இல்லேங்கிறேன். அதனாலே தான் அவா திட்டத்திலே சிலதை எடுத்துக்கிட்டு கட்சியை வளர்க்கலாமின்னு நினைச்சிருக்கேன்."

............

"என்னன்னு கேக்குறிகளா? எல்லா மாவட்டத்திலேயும் மாநாடு போடுறது! நாடகம் நடத்திறது-கதா காலட்சேபம் பண்றது - கூட்டம் போட்டுப் பேசுறது! இது மக்களைக் கொஞ்சம் கவருமில்ல! என்ன நினைக்கிறிக!"

............

"நம்பிக்கையில்லையா? எனக்குமட்டும் இருக்கான்னே? என்னமோ செஞ்சு பாப்போம்!"

............

"போராட்டத்தைப் பத்தி கேக்குறீகளா? அண்ணாத்துரை பேசுற பேச்சைப் பார்த்தா பெரிசா நடக்குமின்னு நினைக்கிறேன். நானும் மெரட்டித்தான் பாக்குறேன்! ஒன்னும் நடக்காது போல்ருக்கு - திட்டம் போட்டு வேலை செய்யிறாக! மொழிப் போராட்டமில்ல-பொது மக்கள் ஆதரவு நிறைய இருக்குமின்னே! இதையே வச்சு அவுக அறுபத்தி ஏழ்லே மந்திரி சபையைக் கைப்பத்தினாலும் ஆச்சரியப்படுறதுக்கில்லேன்னே!"

............

"அப்போ நான் என்ன செய்யப் பேறன்னு கேக்குறீகளா? நீங்க கேக்கிறது எனக்குப் புரியுது! அதுக்குத்தானே இப்பவே நான் மந்திரிப் பதவியை ராஜினாமாப் பன்றேன். அறுபத்தி ஏழு தேர்தல்லே நின்னாலும் நிப்பேன்—இல்லே கட்சி வேலை இருக்குன்னு ஒதுங்கிப் போனாலும் போயிடுவேன். என் ராஜ தந்திரம் உங்களுக்குப் புரியலையா?"

............

"என்ன கேக்குறிக? அவுக மந்திரி சபையிலே பக்தவத்சலம் எப்படி இருப்பார்ன்னு கேக்குறீகளா? சிரிப்புத்தான் வருது! நானே வர்றது சந்தேகமிங்கிறேன்-அவரைப்பத்திக் கேக்குறீகளே!—போனைக் கீழே வையுங்க! இந்திரா காந்தி வர்ருக அவுகளே வரவேற்க, ஏரோட்ரூமுக்குப் போகனும்! அடுத்த வாரம் பேசுவோம்! நமஸ்காரம்!"

● காஞ்சியிலிருந்து வெளிவரும் கருத்துக் கருவூலம்.

● புதுமையும்-கருத்துச் செறிவும் நிறைந்த இலக்கிய ஏடு

## "அறுவடை"

(ஆசிரியர்: சுசீலா தசரதன்)

அக்டோபர் இதழில் அறிஞர் அண்ணா-வினாவுக்கு விடை எழுதுகிறார்.

எல்லா ஊர்களுக்கும் விற்பனையாளர் தேவை.

விவரங்களுக்கு :—

"அறுவடை": சின்னக் காஞ்சிபுரம்.

அடுத்த இதழ்...

### கலைவாணர் சிறப்பிதழாக

வெளி வருகிறது-

இதுவரை வெளிவராத என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் உருவப்படம் கண்ணாடி போட்டு பாதுகாத்து வைக்கத் தகுந்த அளவில் முகப்பை அலங்கரிக்கிறது.

கலைவாணரைப்பற்றி—சிறந்த—சுவையான சிறப்புக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

விலை 20 காசு.

இப்பொழுதே உங்கள் விற்பனையாளரிடம் சொல்லிவையுங்கள்.

ஆசிரியர் வெளியிடுபவர்: ஜி. தினகரன், 31, பார்த்தசாரதிபேட்டைத் தெரு, சென்னை-6.
அச்சிடுபவர்: எஸ். சொக்கலிங்கம், பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17,